பக்கங்கள்:-28

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 27 | ஞாயிற்றுக்கிழமை | 09.06.2024 | அதிர்வு 313

## சம்பிக்கவை வளைக்க சஜித் அணி பிரயத்தனம்



குடியரசு முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவை தமது கூட்டணியில்

06▶



### பொருளாதாரக் குழுவும் வேலைத்திட்டமும் இல்லாத

# சிவப்பு யானைக் குட்டிகள் ரணிலுக்கு பின்னால் ஒளிந்து கொண்டு நாடகம்

### ஜே.வி.பியைப் போட்டுத் தாக்கிய சஜித்





“இன்றைய சிவப்பு வண்ணப் புரட்சியாளர்கள் சிவப்பு யானைக் குட்டிகளாக மாறியுள்ளனர். இந்தச் சிவப்பு வண்ணச் சகோதரர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் டீல் போட்டுக் கொண்டு அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி அலைவரிசையில் விவாதத்துக்கு வருமாறு அழைக்கின்றனர்.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 07▶

## தமிழ்ப் பொது வேட்பாளர் வேண்டாம்! தமிழ்க் கட்சிகள் ரணிலுக்கே ஆதரவு!!

### அஸாத் ஸாலி கூறுகின்றார்

“ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் எல்லாம் தேவையில்லை. தமிழ்க் கட்சிகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே ஆதரவு வழங்கும் என்ற நம்பிக்கை உள்ளது. முஸ்லிம் எம்.பிக்களும் ரணில் பக்கமே நிற்பார்கள்.”

– இவ்வாறு முன்னாள் ஆளுநரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான அஸாத் ஸாலி தெரிவித்தார். 06▶






எனது அலுவலகப் பிரதம செய்தியாளர் எனக்கு வாட்ஸ் அப்பில் ஒரு காணொலியை அனுப்பி இருந்தார்.

ஒரு கறுப்பு நிற பிக்கப் வாகனம். நல்ல கண்டிஷனில் காணப்பட்டது. PE 8939 என்ற இலக்கம் துலக்கமாக அதில் தெரிந்தது. யாழ்ப்பாண மாவட்ட சுற்றுச்சூழல் தொடர்பான அதிகாரி ஒருவரின் உத்தியோகபூர்வ வாகனம் அது. அலுவலக (திணைக்களப்) பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. அதில் வீட்டிலிருந்து வளர்ந்த செழுமையான ஆடு ஒன்று ஏற்றப்படுகின்றது. பிக்கப்பின் பின் ஆசனத்தில் அந்த பெரிய ஆடு இருந்து பயணம் செய்கின்றது. 06▶

# விஜயதாஸவுக்குப் பொறி வைக்க தயாராகின்றது பொதுஜன பெரமுன

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்துள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்துள்ளது.

மொட்டுக் கட்சியின் அரசியல் குழு நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடியது. இதன்போது கட்சியின் ஒழுக்காற்று விசாரணைக் குழு முன்வைத்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறிய தாவது:-

“அரசியல் குழுக் கூட்டத்தில் தேர்தல் தொடர்பில் கலந் துரையாடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவுக்குத் தேசிய ஏற்பாட்டாளர் பதவி வழங் கப்பட்டுள்ளது.

அதேபோல் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் போட் டியிட்டு, தற்போது மற்றுமொரு கட்சியில் இணைந்துள்ள



விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவ டிக்கை எடுப்பதற்கு ஒழுக்காற்று விசாரணைக் குழு அனுமதி கோரி இருந்தது. அதற்குரிய அனுமதியும் வழங்கப்பட்டது.” - என்றார்.

# 31 கிலோ கேரள கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்



யாழ்ப்பாணத்தில் 31 கிலோகிராம் கேரளா கஞ்சாவுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வடமராட்சி கிழக்கு, மணற்காட்டுப் பகுதியில் கேரள கஞ்சா பொதிகளை இளைஞர் ஒருவர் பதுக்கி வைத்திருக்கின் றார் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவத்தினர், கஞ்சா பொதிகளுடன் இளைஞரைக் கைது செய்துள்ள னர்.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள் 31 கிலோகிராம் நிறை யுடையவை எனவும், கைது செய்யப்பட்ட இளைஞர், மீட்கப் பட்ட கஞ்சா பொதிகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்கா கப் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனவும் இராணுவத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# நாட்டில் கடந்த ஏழு நாள்களில் எழுநூறு டெங்கு நோயாளர்கள்

நாட்டில் கடந்த ஏழு நாள்களில் 700 டெங்கு நோயா ளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு விடுத்துள்ள புதுப்பிக் கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மழையுடனான வானிலை மற்றும் வெள்ள நீர் தேக்கம் என்பன டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு வழிவகுத்துள்ளன.

இந்த ஆண்டில் இதுவரையில் 9 பேர் டெங்கு நோய் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த ஆண்டில் இதுவரையில் 25 ஆயிரத்து 619 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் அதிகபட்சமானோர் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 5 ஆயி ரத்து 554 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம் மேல் மாகாணத்தில் குறித்த காலப்பகுதி யில் 9 ஆயிரத்து 348 டெங்கு நோயாளர்கள் அடையா ளம் காணப்பட்டுள்ளனர்.

இது மாகாண ரீதியாக அடையாளம் காணப்பட்ட அதிக பட்சமான டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையாக பதிவாகியுள்ளது.

இலங்கையின் பல பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருவதால் டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில் சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்குமாறும் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்குமாறும் சுகாதார அதிகாரிகள் மக்களிடம் கோரியுள்ளனர்.



# தையிட்டி விகாரைக் காணியையும் இரகசியமாக அளவீடு செய்ய முயற்சி

## கொழும்பு நில அளவைத் திணைக்களத்தினர் இந்த வாரம் வருகை

(ந.லோகதயாளன்)

தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி கொழும்பு நில அளவைத் திணைக்களத்தினர் மூலம் இந்த வாரம் இரகசியமாக அளவீடு செய்வதற்கு முயற்சிகள் இடம்பெறுகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்டம், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் தையிட்டிக் கிராமத்தில் மக்கள் நிலங்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டுள்ள விகாரையைச் சூழவுள்ள காணிகளை நிரந்தரமாக விகாரைக்கே சுவீகரிக்க அளவீடு செய்வதற்குப் பல தடவைகள் முயற்சிக்கப்பட்டும் பொதுமக்களால் தடுக்கப்பட்டன.

இதனால் தம்மால் அளவீடு செய்ய முடியவில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட நில அளவைத் திணைக்களம் நில அளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்துக்கு எழுத்தில் தெரியப்படுத்தியிருந்தனர். அதன் அடிப்படையில் நில அளவைத் திணைக்களத்தின் கொழும்பு தலைமை அலுவலக நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எந்தவித முன்னறிவித்தலும் இன்றி வருகை தந்து அளவீடு செய்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே கீரிமலை ஜனாதிபதி மாளிகை கடந்த 16 ஆம் திகதி கொழும்பில் இருந்து வந்த நில அளவை உத்தியோகத்தர்களால் இரகசியமாக அளவீடு செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது தையிட்டி விகாரையும் அடுத்த வாரம் இரகசியமாக அளவீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் மூன்றாம் பாலினத்தவர்களின் நடைபயணத்தில் கனேடியத் தூதரும்






யாழில் மூன்றாம் பாலினத்தவர்களால் சமத்துவம், சமூக நீதி கோரி நேற்று முன்னெடுக்கப்பட்ட நடைபயண பேரணியில் கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வால்ஸ் பங்கேற்றுள்ளார்.

இந்த நடைபயணமானது, நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, மூன்றாம் பாலினத்தவர்கள், தமக்கும் சுயமரியாதை, சமத்துவம் மற்றும் சமூக நீதி ஆகியன வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ் மத்திய பஸ் நிலையத்தின் முன்பாக ஆரம்பமான இந்த நடைபயணம், முதலில் சத்திரச் சந்தியை நோக்கி இடம்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பண்ணை வீதியூடாக பொலிஸ் நிலைய வீதி, பொது நூலகம் முன்பாக நிறைவு பெற்றுள்ளது.

மேலும், இந்த நடைபயணத்தில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் உட்பட தூதரக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், இந்த நிகழ்வில் அதிகமான மூன்றாம் பாலினத்தவர்களும் இணைந்து மூன்றாம் பாலினத்தவர்களுக்கும் சமூகத்தில் சம உரிமை வழங்க வேண்டும் என தெரிவித்து பொது மக்களுக்கு தெளிவூட்டும் பதாகைகளை காட்சிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.



# முப்படையிலுள்ள இஸ்லாமியர்களுக்கு ஹஜ் யாத்திரை செல்ல இலவச வாய்ப்பு

முப்படையிலுள்ள இஸ்லாமியர்களுக்கு ஹஜ் யாத்திரைக்கான இலவச வாய்ப்பை வழங்க சவூதி அரேபிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனின் விசேட கோரிக்கைக்கு அமைவாக இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் கலீத் ஹமட் அல்கதானியின் தலையீட்டில் இந்த வாய்ப்பு கிட்டியுள் ளதாக பாதுகாப்பு அமைச்சு வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சரின் கோரிக்கைக்கு அமைய சவூதி அரேபிய தூதுவரினால் வருடாந்த ஹஜ் யாத்திரைக்கான 5 விசேட வாய்ப்புகளை அந்த நாட்டு அரசாங்கத்தின் ஆதரவுடன் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் துல்ஹஜ் மாத தலைப்பிறை தென்பட்டுள்ளமையால் எதிர்வரும் 17 ஆம் திகதி ஈதுல் அல்ஹா ஹஜ்ப பெருநாள் கொண்டாடப்படும் என கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்துள்ளது.

தலைப்பிறையை தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிறைக்குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா பிரநிதிகள், முஸ்லீம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது நாட்டின் பல பகுதிகளில் துல்ஹஜ் மாத தலைப்பிறை தென்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்தமையினால் இலங்கை வாழ் முஸ்லீம்கள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஈதுல் அல்ஹா ஹஜ்ஜுப் பெருநாளைக் கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கு முன்னைய நாள் அரபா நோன்பை நோற்குமாறும் அறிவிக்கப் பட்டுள்ளது.





# சிறுமியை மிலேச்சத்தனமாக தாக்கியவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்

4 வயது சிறுமியை மிலேச்சத்தனமாக தாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 'குகுல் சமிந்த' என்பவர் காயமடைந்துள்ள நிலையில் அனுராதபுரம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சிறைச்சாலை வளாகத்திற்குள் மேற்படி நபர் தாக்கப்படவில்லை என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளரும் ஆணையாளர் நாயகமுமான காமினி பி. திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

வெலிஓயா பிரதேசத்தில் நான்கு வயது சிறுமியை மிலேச்சித்னமாக தாக்கிய சந்தேகநபர் அண்மையில் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றினால் உத்தரவிடப்பட்டது.

# மரண அறிவித்தல்



தோற்றம்
22 - 12 - 1944

மறைவு
06 - 06 - 2024

## முத்துக்கண்ணு செல்வராஜா தேவர்

இறக்குவானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. M. செல்வராஜா தேவர் அவர்கள் 6.6.2024 வியாழக்கிழமையன்று சிவப்பதமடைந்தார்.

அன்னார் அமரர் முத்துக்கண்ணு தேவர், அமரர் பாலாமணி அம்மாளின் அன்புப் புதல்வனும், அமரர் தனலட்சுமியின் அன்பு கணவரும், கருணாகரன், சுபதர்ஷினி, தனராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவராஜா, ராஜபிரஷாந்தினி, மாளவிகா ஆகியோரின் மாமனாரும் Harithra, அக்ஷயன், யாதர்ஷ் ஆகியோரின் தாத்தாவும், அமரர் வெள்ளதாயி, அமரர் பால்சாமி தேவர், தேவராஜா தேவர், அமரர் சகுந்தலாதேவி, சந்திரமோகன் தேவர், பாக்கியலக்ஷ்மி, இந்திராணி, அமரர் ராசதேவி, ராசதேவன் தேவர், பவளராணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (8.6.2024) சனிக்கிழமை காலை 7.30 மணி முதல் LANKA FLORISTS (Punchi Borella) வைக்கப்பட்டது. இன்று (9.6.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். பின்னர் அவரின் பூதவுடல் 2 மணியளவில் Borella பொது மயானத்திற்கு எடுத்துசெல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**கருணாகரன் (கண்ணா), சுபதர்ஷினி (சுபா), தனராஜ்**
0773242032

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த நேரத்தியான வாகனத்தின் சீற்றில் ஆடு ஒன்றை ஏற்றினால் வாகனம் என்ன கதியாகியிருக்கும் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்வார்கள். அந்த வாகனம் பயணம் செய்து பிறிதொரு இடத்திற்குக் கொண்டு போய் அந்த ஆட்டை இறக்குவதும் காணொலியில் இருந்தது.

அதைப் பார்த்துவிட்டு எனது செய்தியாளருடன் தொடர்பு கொண்டு விவரம் கேட்டேன். அவர் அரச அதிகாரியின் திருவிளையாடல் என்றார்.

"அரச வாகனத்தில் வீட்டின் ஆடு, மாடுகள் கால்நடைகள் எல்லாவற்றையும் ஏற்றிப் பயணிக்கலாமா என்று சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் கேட்க வேண்டாமா?" – என்று செய்தியாளரை வினவினேன்.

"இது தொடர்பில் மாவட்ட செயலகத்தின் சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான அதிகாரியைத் தொடர்பு கொண்டு கேட்டேன். கால்நடை ஏற்றிச் செல்லப்பட்டதுதான் என்பதை அவர் ஒப்புக் கொண்டார். அப்படிப் பட்ட காணொலி உங்களுக்கு எப்படி கிடைத்தது என்று கேட்டார். கால்நடை ஏற்றிச் செல்லப்பட்டது தொடர்பான விவரங்களையோ, ஏன் ஏற்றிச் செல்லப்பட்டது என்பதையோ உங்களுக்கெல்லாம் கூற முடியாது என்று வீம்பாகப் பதில் கூறினார். இனி விடயத்தை நீங்கள் கையாளுங்கள்" – என்று பந்தை என் பக்கம் தட்டிவிட்டார் செய்தியாளர்.

கால்நடை வளர்ப்போர் அவற்றைத் தங்களின் தனிப்பட்ட வாகனத்தில் ஏற்றி செல்வது என்றால் கூட கால்நடை வைத்திய அதிகாரியின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு உண்டு. ஆனால் இங்கு அது எதுவும் கடைப் பிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

வடக்கு மாகாணத்தில் அரச வாகனங்கள் எப்படிப் பராமரிக்கப்படுகின்றன, பேணப்படுகின்றன, சீரழிகின்றன என்ற சீத்துவத்தைப் புள்ளி விவரங்களுடன் விளக்கும் கட்டுரை ஒன்று ஓரிரு வாரங்களுக்கு முன்னர் எமது பத்திரிகையில் வெளியாகி இருந்தது. அதுதான் என் நினைவுக்கு வந்தது.

அரச வாகனத்தை வீட்டின் கால்நடை ஏற்றி இறக்கும் வேலைக்கு பயன்படுத்தி விட்டு, அது குறித்து வீம்பாகப் பதிலளிக்கும் அதிகாரியையும் வைத்துக்கொண்டு, எப்படி அரச திணைக்களம் உய்யப் போகின்றது? மேலதிகாரிகள் இத்தகவல் குறித்து என்ன செய்யப் போகின்றார்கள், பார்த்தும் வாளாவிருப்பார்களா என்பதை வாசகர்களுக்கு சில தினங்கள் கழித்து விசாரித்து நினைவூட்டுவேன்.

## சம்பிக்கவை வளைக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இணைத்துக்கொள்வதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி முயற்சித்து வருகின்றது.

இதற்கான பேச்சுகள் ஆரம்பமாகியுள்ளன என்று அறியமுடிகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை வகிக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அக்கட்சியில் இருந்து விரைவில் வெளியேறத் திட்டமிட்டுள்ளார். ராஜித சேனாரத்னவும் ரணிலை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலேயே உள்ளார்.

இந்நிலையிலேயே, இவ்விருவரின் இடைவெளியை நிரப்பும் வகையிலும், சிங்கள, பௌத்த வாக்கு வங்கியைக் குறிவைத்தும் சம்பிக்க ரணவக்கவுக்கு சஜித் தரப்பு வலைவிரித்துள்ளது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பட்டியலின் கீழ்தான் சம்பிக்க ரணவக்க போட்டியிட்டார். அதன்பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வெளியேறி, புதிய கட்சியை உருவாக்கினார்.

## தமிழ்ப் பொது வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில்ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத்திட்டம் தொடர வேண்டும் என்பதையே நாட்டு மக்கள் விரும்புகின்றனர். எனினும், இந்த வேலைத்திட்டத்தைக் குழப்பும் முயற்சியில் எதிரணிகள் ஈடுபட்டு வருகின்றன.

இந்நாட்டிலுள்ள முஸ்லிம்கட்சிகளின் எம்.பிக்கள் ரணில் பக்கமே உள்ளனர்.

தமிழ்ப் பொது வேட்பாளர் அவசியமில்லை எனத் தமிழ்க் கட்சிகள் கூறுகின்றன. சி.வி. விக்னேஸ்வரன், ரணிலுக்கே ஆதரவு. அவர் ஓய்வுபெற்ற நீதியரசர். நாட்டை எவரால் நிர்வகிக்க முடியும் என்பது அவருக்குத் தெரியும்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரே தலைவர் ரணில்தான்." – என்றார்.




# சிவப்பு யானைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெல்லும் ஜன வெள்ளம் – ஐக்கிய மீனவர் மாநாடு நேற்று புத்தளம் மாவட்டத்தை மையமாகக் கொண்டு சிலாபம் நகரில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொருளாதாரக் குழு விவாதத்துக்கு வருமாறு ஐக்கிய மக்கள் சக்தி அழைப்பு விடுத்தபோது, பொருளாதாரக் குழுவொன்று இல்லாத மக்கள் விடுதலை முன்னணி அதை விட்டுவிட்டு, தலைவர்கள் இடையே விவாதம் எனத் தம்பட்டம் அடித்துக் கொண்டு பேசி வருகின்றது. பொருளாதாரக் குழுவின் விவாதம் மற்றும் தலைவர்களின் விவாதம் ஆகிய இரண்டுக்கும் இரு நாட்களை ஒரே நேரத்தில் ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.

நாடு வங்குரோத்தடைந்துள்ள நிலையில், நாட்டை யாரால் காப்பாற்ற முடியும் என்பதை அறிய மக்களுக்கு உரிமை உள்ளது. நாட்டில் டொலர்கள் இல்லாமல் போயுள்ள இந்தத் தருணத்தில், பெரிதாகப் பேசி வரும் சிவப்பு யானைக் குட்டிகளுக்குப் பொருளாதாரக் குழுவும் வேலைத்திட்டமும் கூட இல்லை. அவர்கள் விவாதத்துக்குத் தயார் இல்லை என்றாலும், இரண்டு விவாதங்களுக்கும் நாம் தயார்.

பொருளாதார குழுக்கள் மத்தியிலான விவாதத்தின் பின்னர் தலைவர்களிடையேயான விவாதம் நடத்தப்பட வேண்டும்.

விவாதங்களைப் பற்றிப் பேசும் போது, சிவப்பு யானைக் குட்டிகளின் தலைவர் தமது தலைவரான ஜனாதிபதியை அணுகி, அரசுக்குச் சொந்தமான தொலைக்காட்சி அலைவரிசையில் சமீபத்தில் நாடகம் ஒன்றை அரங்கேற்றினர். பொருளாதாரக் குழு இல்லாதது அவர்களின் தவறாகும். அவர்களால் பணியாற்ற முடியாவிட்டாலும், எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு நாம் பல்வேறு பணிகளை முன்னெடுத்துள்ளோம். எனவே, எந்த நேரத்திலும் போட்டியிட்டு பணியாற்றத் தயாராக இருக்கின்றோம்.

நாட்டைச் சுற்றி கடல் இருந்தாலும், கடற்கரையில் இருந்து 200 கடல் மைல் தொலைவிலுள்ள கடற்பரப்பு எங்களுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மீன்பிடித் துறை 1.1 சதவீத பங்களிப்பையே வழங்குகின்றது. இந்நிலை மாற வேண்டும். நன்னீர் மீன்பிடி உள்ளடங்களாக மீன்பிடித் தொழிலை புதிய தொழில்நுட்பத்தினூடாக வலுவூட்டப்பட்ட மீன்பிடித் தொழிலாக மாற்றியமைக்க எமது ஆட்சியில் நடவடிக்கை எடுப்போம்.

மண்ணெண்ணெய்க்கான மானியம், உற்பத்திப் பொருட்களுக்கான வரிச் சலுகை, தேவையான உபகரணங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை உருவாக்குதல் மற்றும் அதற்கு அரச ஆதரவை வழங்குதல், மீனவக் குடும்பங்களின் பெண்களை வலுவூட்டும் வகையிலும், ஒட்டுமொத்த மீனவர்களை வலுவூட்டும் வகையிலும் அமைந்த புதிய தேசிய மீன்பிடிக் கொள்கையை முன்வைப்போம். தீவு நாடாக, நாட்டைச் சுற்றியுள்ள கடல் வளத்தையும் அதன் மீன் வளங்களையும் நிலையான அபிவிருத்திக்கு உட்படுத்துவோம். இந்நாட்டில் மீன்பிடித் தொழிலில் புதிய மறுமலர்ச்சி உருவாக்கப்படும்."
– என்றார்.














# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## அரசியல் குழப்பம் வரலாம்

நிறைவேற்றதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நெருங்குகின்றது.

அதனை ஒட்டிய அரசியல் குழப்பங்களும், அவற்றுடன் தொடர்புடைய பிற சிக்கல்களும் இனி வெடித்துக் கிளம்ப அதிக வாய்ப்புண்டு.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக்கட்சி வேட்பாளராக ஒருவர் களமிறங்குவார், வாக்குச்சீட்டில் மொட்டின் சின்னம் நிச்சயம் இருக்கும் என்று பொது ஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தர்கள் கூறி வருகின்றனர்.

இவ்விடயத்தில் தமது முடிவை வரும் 15 ஆம் திகதிக்குள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிப்படுத்தி வெளிப்படுத்த வேண்டும் என்று மொட்டுக் கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தமது கட்சி சார்பில் உத்தியோகப்பற்றற்ற விதத்தில் காலக்கெடு விதித்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்துவிட்டார் எனச் செய்திகள் வெளியாகி உள்ள பின்னணியில், தமது நிலைப்பாட்டை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மொட்டுத் தரப்பினருக்கு தெரியப்படுத்திவிட்டார் என்று சில வட்டாரங்கள் நேற்று கொழும்பில் தகவல் வெளியிட்டன.

தான் மொட்டுக் கட்சியினதோ அல்லது தனது ஐக்கிய தேசியக் கட்சியினதோ வேட்பாளராகக் களமிறங்காமல், பல தரப்புக்களினதும் ஆதரவில் பொது வேட்பாளராகக் களமிறங்கவே விரும்புகின்றார் என்று மொட்டுத் தலைவர்களுக்கு ரணில் விக்கிரமசிங்க கோடி காட்டி இருக்கின்றாராம்.

அப்படித் தாம் பொது வேட்பாளராக நிற்பதற்கு மொட்டுக் கட்சி வெளியில் இருந்து தனக்கு ஆதரவு தர வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்க்கின்றார் என்றும் கூறப்படுகிறது.

அதற்கு மொட்டுக் கட்சி இணங்குமா என்பது பெரும் கேள்விக்குறியே.

தாம் தலைமை வகிக்கும் தமது ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கொழும்பில் ஒரு தலைமையகம் இருக்கத் தக்கதாக, அதற்குப் புறம்பாக தமக்கென தலைநகர் கொழும்பில் தனியான ஓர் அரசியல் அலுவலகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்திருக்கின்றமை, தாம் பொது வேட்பாளராகவே களமிறங்க விரும்புகின்றார் என்பதை வெளிப்படுத்தும் விடயம்தான். அந்த அலுவலகம் ஊடாகத் தமது பொது வேட்பாளர் நடவடிக்கையை அவர் முன்னெடுக்க விரும்புகிறார் என்று கூறப்படுகிறது.

வரும் ஜனாதிபதித் தேர்தலின் வாக்குச்சீட்டில் தமது மொட்டுச் சின்னம் கட்டாயம் இருக்க வேண்டும் - இருக்கும் - என்று அடித்துக் கூறிய மொட்டுக் கட்சியினர் பொது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க இறங்குவதற்கு ஆதரவு கொடுத்து, வாக்குச் சீட்டில் தமது மொட்டுச் சின்னம் இடம்பெறாமல் போவதை பார்த்து வாளாவிருப்பார்களா என்று கேள்வி எழுகின்றது.

அல்லது வாக்குச்சீட்டில் மொட்டுச் சின்னம் இடம்பெற வேண்டும் என்ற தமது கொள்கை நிலைப்பாட்டுக்காக தமது வேட்பாளர் ஒருவரை சஜித், அநுர, ரணில் ஆகிய மூவருக்கு எதிராக நான்காவது வேட்பாளராகக் களமிறக்குவார்களா என்ற கேள்வியும் எழுகின்றது.

அப்படி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகவும் ஒரு வேட்பாளரைக் களம் இறக்கும் திட்டத்தை மொட்டுக் கட்சி முன்னெடுக்க முயன்றால் இப்போதுள்ள அமைச்சரவை, நாடாளுமன்றத்தில் எல்லாம் குழப்பங்கள், அணி மாறல்கள், கால்வாரல்கள் போன்றவை உச்சமாக அரங்கேறும்.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் வரை ஒரு ஸ்திரமான அரசைப் பேணி, தேர்தல் வாக்களிப்பை சுமுகமாக கொண்டு சென்று முடிப்பதற்கு ரணில் தலைமையிலான ஆட்சித் தரப்பு மிகுந்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி நேரும்.

வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் - அதில் போட்டியிடும் ஏற்பாடு தொடர்பில் - மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான மொட்டுக் கட்சியினருக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இணக்கமான ஓர் உடன்பாடு எட்டப்படவில்லையானால் இப்போதைய அரசுக் கட்டமைப்பு ஏற்பாடுகள் குழம்பிப் போகும்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்து, அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளிப்படும் வரை, இப்போது உருவாகக்கூடிய அந்த அரசியல் குழப்பம் நீடிக்கக் கூடிய ஏது நிலைகளும் உள்ளன.






# டில்லியில் இன்றும், நாளையும் 144 தடை உத்தரவு அமுல்

பிரதமராக நரேந்திர மோடி இன்று பதவியேற்கவுள்ள நிலையில், டில்லியில் இன்றும், நாளையும் முலாகும் வகையில் 144 தடை உத்தரவை பொலிஸ் பிறப்பித்துள்ளது.

இந்திய மக்களவைத் தேர்தலில் பாரதீய ஜனதா கட்சி அங்கத்துவம் வகிக்கும் தேசிய ஜனநாயக கூட்டணி 292 இடங்களில் வெற்றி பெற்றது.

ஆட்சியமைப்பதற்கு 272 இடங்கள் தேவைப்பட்ட நிலை யில் தேசிய ஜனநாயக கூட்டணியின் முக்கிய பேச்சு வார்த்தை நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

இதன்போது பாரதீய ஜனதா கட்சி ஆட்சியமைப்பதற்கு கூட்டணி கட்சிகள் ஆதரவு வழங்கியிருந்தன.

இதன் அடிப்படையில் ஆட்சியமைப்பதற்கான கோரிக் கையை ஜனாதிபதியிடம் நரேந்திர மோடி முன்வைத்தார்.

அதற்கு ஜனாதிபதியும் அனுமதியளித்த நிலையில், இன்று இந்திய பிரதமராக நரேந்திர மோடி தொடர்ச்சியாக மூன்றாவது முறையாகவும் பதவியேற்கவுள்ளார்.

இந்த நிலையில் பாதுகாப்பு கருதி 144 தடை உத் தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதோடு டில்லியில் ஆளில்லா விமானங்களை பறக்கவிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள் ளது.

நரேந்திர மோடி பதவியேற்பு விழாவில் சார்க் நாடுக ளின் தலைவர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த ஆண்டு டில்லியில் ஜி20 மாநாடு நடந்த போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு அம்சங்கள் இப்போதும் பின்பற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பதவியேற்பு விழாவுக்கு வரும் உலகத் தலை வர்கள் ஒவ்வொருவருக்கும் அவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களில் இருந்து விழா நடைபெறும் குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வர பிரத்யேக வழித்தடம் அமைக் கப்படுகிறது. அந்தப் பாதை முழுவதும் ஸ்நைப்பர்களும், துப்பாக்கி ஏந்திய பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். நகரில் முக்கியமான பகுதிகளில் ட்ரோன்கள் மூலம் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்க்கட்சித் தலைவரானார் ராகுல் காந்தி: காங்கிரஸின் செயற்குழுவில் தீர்மானம்



மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக ராகுல் காந் தியை ஏகமனதாக தேர்வு செய்து காங்கிரஸ் செயற்குழு கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதனை கட்சியின் மூத்த தலைவர் கே.சி.வேணுகோபால் உறுதிப்படுத்தியுள் ளார்.

காங்கிரஸ் கட்சியின் நீட்டிக்கப்பட்ட செயற்குழுக் கூட்டம் டில்லியில் நேற்று நடைபெற்றது. காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி, ராகுல் காந்தி, கே.சி.வேணுகோபால், ப.சிதம்பரம், அம்பிகா சோனி, பிரியங்கா காந்தி, ஜெயராம் ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர், வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல் களை எதிர்கொள்ளுதல், கூட்டணிக் கட்சிகளுடன் இணக் கமான போக்கைக் கடைபிடிப்பது உள்பட பல்வேறு விடயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

அந்த வரிசையில் முக்கிய முடிவாக மக்களவை எதிர்க் கட்சித் தலைவராக ராகுல் காந்தியை முன்மொழிந்து ஏகமன தாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது குறித்து டில்லியில் செய்தியாளர்களை சந்தித்த கே.சி.வேணுகோபால்,

“மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பை ராகுல் காந்தி ஏற்க வேண்டும் என காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தக் கூட்டணியை மக்களவையில் வழிநடத்திச் செல்ல ராகுல் காந்தி சிறந்த தேர்வாக இருப்பார்” என்று கூறினார்.

அப்போது, ராகுல் காந்தி இந்த முடிவை ஏற்றுக் கொள் வாரா எனக் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு கே.சி.வேணு கோபால்,

“ராகுல் காந்தி இதன் மீது விரைவில் முடிவெடுப்பார்” என்றார். தொடர்ந்து பேசிய அவர், “காங்கிரஸ் கட்சி மீண்டும் எழுச்சி காணத் தொடங்கியுள்ளது. காங்கிரஸ் காரிய கமிட் டியில் 4 மாதங்களுக்கு முன்னால் இருந்த நிலைமை தற் போது முற்றிலுமாக மாறிவிட்டது” என்றார்.

# இஸ்ரேலின் சிறப்பு இராணுவ நடவடிக்கை; ஹமாஸ் வசமிருந்த பணயக் கைதிகள் மீட்பு







மத்திய காசாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய சிறப்பு இராணுவ நடவடிக்கையில் ஹமாஸ் வசம் இருந்த பணயக் கைதிகளில் நால்வர் மீட்கப்பட்டுள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ளது.

25 வயதான நோவா ஆர்கமணி, அல்மோக் மீர் ஜான் (வயது 21), 27 வயதான அன்றய கோஸ்க்ளோவ், 40 வயதான ஷ்லோமி ஜிவ் ஆகியோரே மீட்கப்பட்டவர்களாவர்.

காசா பகுதியில் இருந்து நான்கு பணயக்கைதிகளை மீட்டதில் நாடு "மிகவும் மகிழ்ச்சி" அடைவதாக இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கேலன்ட் குறிப்பிட்டார்.

"இஸ்ரேல் படைகள் காசாவில் ஹமாஸால் பிடிக்கப்பட்ட நான்கு பணயக்கைதிகளை மீட்டு இஸ்ரேலுக்கு கொண்டு வர ஒரு சிக்கலான, வீர நடவடிக்கையை நடத்தின. 120 பணயக்கைதிகள் வீட்டிற்கு வரும் வரை நாங்கள் சண்டையிட்டுக் கொண்டே இருப்போம்" என்று அவர் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்தார்.

நேற்று அதிகாலை மத்திய காசாவின் நுசிராத் பகுதியில் பணயக்கைதிகளை மீட்கும் நடவடிக்கையின் போது பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவின் அதிகாரி ஒருவர் பலத்த காயம் அடைந்துள்ளார் என பொலிஸ் அறிவித்துள்ளது. அந்த அதிகாரி சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை நான்கு இஸ்ரேலிய பணயக்கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் மத்திய காசாவில் உள்ள நுசிராத் மற்றும் பிற பகுதிகளில் இஸ்ரேலிய தாக்குதல்களில் குறைந்தது 50 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் என சுகாதார அதிகாரி ஒருவர் ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்துள்ளார்.

டெல் அவிவ் மற்றும் ஏதென்ஸில் உள்ள இஸ்ரேலியர்கள் மத்திய காசா பகுதியில் ஒரு சிறப்பு நடவடிக்கையில் நான்கு பணயக்கைதிகள் மீட்கப்பட்டதைக் கொண்டாடினர். டெல் அவிவ் கடற்கரையில் ஒருவர் ஒலிபெருக்கியில் பணயக் கைதிகள் மீட்பை அறிவித்தார். இதனையடுத்து அங்கிருந்தவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர். ஏதென்ஸில், டசின் கணக்கான இஸ்ரேலியர்கள் தெருக்களில் செய்தியைக் கொண்டாடி, "ஆம் இஸ்ரேல் சாய்." என கோஷமிட்டனர்.

மூத்த ஹமாஸ் அதிகாரி சமி அபு ஸுஹ்ரி, காசா பகுதியில் பணயக்கைதிகளை மீட்கும் இஸ்ரேலிய இராணுவ நடவடிக்கைக்கு பதிலளிக்கையில்,

"ஒன்பது மாத சண்டையின் பின்னர் நான்கு பணயக் கைதிகளை மீட்டெடுப்பது தோல்வியின் அடையாளம், சாதனை அல்ல" என்று ரொய்ட்டர்ஸிடம் தெரிவித்துள்ளார்.

# ஆஸ்திரேலியாவில் கனமழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளன

## அவசர நிலை அறிவிப்பு




ஆஸ்திரேலியாவில் கனமழை காரணமாக பல பகுதிகள் வெள்ளத்தால் மூழ்கியுள்ளன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனமழையால் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத் தலைநகரான சிட்னியில் அதிகளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக பல தாழ்வான புறநகர் பகுதிகளில் மக்களை வெளியேற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், கடந்த 24 மணி நேரத்தில், 13 பகுதிகளில் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன எனவும் உதவிக்காக 297 அழைப்புகள் விடுக்கப்பட்டதாகவும் அவசரகால அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேவேளை, நியூ சவுத் வேல்ஸ் மாநில அவசர சேவைகள் பிரிவினரால் நேற்று காலை வெளியிடப்பட்ட அறிவிப்பில், நகரின் வட மேற்கு புறநகர்ப் பகுதிகளில் பத்து அவசரகால வெளியேற்ற உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சுமார் 5 மில்லியன் மக்கள் வசிக்கும் சிட்னி நகரின் வடமேற்கில் பாரிய வெள்ளம் ஏற்படக்கூடும் என்று தேசிய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கலைந்தது மோடியின் விம்பம் கை கொடுக்காத மதவாதம்


வி.எஸ்.சிவகரன்

இந்தியாவின் 18 ஆவது நாடாளுமன்றத் தேர்தல் கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்றது.

உலகின் ஆகப்பெரிய ஜனநாயக நாடாக பிம்பத்தை காட்டிக்கொண்டாலும் அங்கு பணநாயகமும் அதிகார துஷ்பிரயோகமே ஜனநாயகத்தை தீர்மானிக்கின்றன. இந்த ஜனநாயகத் திருவிழாவில் ஒவ்வொரு தடவையும் மக்கள் தோற்றுக் கொண்டே போகிறார்கள். அதனால் தான் ஜனநாயகம் என்பது கும்பலின் ஆட்சி என்றார் லெனின். நாடாளுமன்றம் பன்றிகளின் தொழுவம் என்றார். அயோக்கியர்கள் கூடி நேரத்தை செலவு செய்யும் இடமே நாடாளுமன்றம் என்றார்.

ஜனநாயகத்தின் போலித் தன்மையையும் பலவீனத்தையும் விமர்சனத்துக்கு உள்ளாக்கியதே இந்திய தேர்தலும். ஜனநாயக கேலிக்கூத்தாக தான் அது நடந்தேறியது. வெறுப்பு பேச்சுக்களும் இன அடக்குமுறை வெளிப்பாடுகளும் என மூன்றாம் தர நடத்தைகளுடனேயே தேர்தல் களம் அமைந்திருந்தது.

தேர்தல் ஆணையம் என்பது வெறும் பொம்மை யாகவே – ஆளுங்கட்சியின் கைப்பாவையாகவே – இயங்கியது. ஜனநாயகத்தின் போர்வையிலே மதவாத சர்வாதிகாரத்தையே பா.ஜ.க. நடைமுறைப்படுத்தியது. மதம் என்பது தனி மனித நம்பிக்கை சார்ந்தது. உலகம் முழுவதும் மதமற்றவர்கள், நாஸ்திகர்கள் அல்லது பகுத்தறிவாளர்கள் அதிகரித்து விட்ட இந்த நிலையில், அடிப்படை வாத சனாதன கோட்பாட்டை முதன்மைப் படுத்துவது என்பது பெரும் விருப்புக்கு உள்ளாகாது என்பதை இந்த தொழில் நுட்ப யுகத்திலாவது மத வணிகர்கள் அல்லது கடவுள் வியாபாரிகள் புரிந்து கொள்ள வேண்டும். மூன்று தசாப்தமாக நீடித்த அயோத்தியின் இராமர் கோவில் கட்டும் விவகாரம் முடிவுக்கு வந்து, அவசர அவசரமாக கோயிலைக் கட்டி, கட்டுமானப் பணிகள் முடிவதற்கு முன்பே தேர்த லுக்காக இராமர் கோவிலை திறந்து வைத்தார்கள். ஆனால் இராமர் கை கொடுக்கவில்லை. உத்தரப் பிரதேசத்தின் அயோத்தி இராமர் கோயில் சூழ உள்ள ஐந்து தொகுதிகளையும் 'இண்டியா' கூட்டணி கைப்பற்றியது.

பைசாபாத், பாரபங்கி, அமேதி, அம்பேத் நகர், சுல்தான்பூர் ஆகியன அந்தத் தொகுதிகள். அந்த மக்களின் அடிப்படை இருப்பான நிலத்தை அபகரித்து, வாழ்வியல் உரிமைகளை மறுத்த காரணத் தினால் கோபம் கொண்ட மக்கள் பா.ஜ.கவுக்கு எதிராக வாக்களித் தார்கள். இவர்கள் மொழியில் இராமரே இவர்களை தோற்க டித்து விட்டார் போலும். மோடி எனும் கட்டமைக்கப்பட்ட பெரு விம்பம் கலைந்து விட்டது.

மோடியே வாரணாசி தொகுதி யில் தேர்தல் முடிவுகள் அறிவிக் கப்பட்ட அன்று காலை 10:30 மணி வரை வாக்கு வீதத்தில் பின்தங்கியே இருந்தார். 2024ஆம் ஆண்டு மூன்று லட்சத்து 71 ஆயிரம் வாக்குக வித்தியாசத்திலும், 2019 ஆம் ஆண்டு நான்கு இலட்சத்தி 79 ஆயிரம் வாக்குக வித்தியாசத்திலும் வென்ற அவரால் 2024ஆம் ஆண்டு ஒரு இலட்சத்து 52 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்திலே வெற்றி பெற முடிந்துள்ளது.

இவருடைய போலி வாக்குறுதிகள், வெறுப்புப் பேச்சுக்கள், பண மதிப்பிழப்பு, காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கம், விவசாயிகளுக்கு எதிரான சட்ட மூலம், சிறு பான்மையினருக்கு எதிரான குடியுரிமைச் சட்டத் திருத்தம், 'ஒரு நாடு ஒரு தேர்தல்' எனும் கோசம் மற்றும் வருமான வரித்துறை, அமுலாக்கல்துறை, தேசிய புலனாய்வு அமைப்பு, மத்திய புலனாய்வுத்துறை மூலமான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை, சரக்கு மற்றும் சேவை வரியை (ஜி.எஸ்.டியை) குடிசைக் கைத்தொழில் வரைக் கொண்டு வந்தது, அதானி, அம்பானி, நீரவ்மோடி போன்றவர்களின் கூட்டு, ராகுல் காந்தியை பதவி நீக்கியமை, ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன், டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரி வால், துணை முதல்வர் மணிஸ் சிசோடியா, தமிழக அமைச்சர் செந்தில் பாலாஜி இன்னும் பல அரசியல் ரீதியான கைதுகள், வறுமை, வேலைவாய்ப்பின்மை, மதவாத வெறுப்பு, இஸ்லாமிய எதிர்ப்பு வாதம், கத் தோலிக்க எதிர்ப்பு வாதம் போன்றவற்றுடன் சர்வா திகார ஆட்சியைத் தொடர்ந்ததால் வந்த பின்னடைவு இது.

தொடர்ச்சி▼



# கலைந்தது மோடியின் விம்பம் கை கொடுக்காத மதவாதம்

தொடர்ச்சி▲

இது,மட்டுமின்றி மாநிலக் கட்சிகளை பழிவாங்கியமையும் – குறிப்பாகத் தமிழ்நாட்டில் அ.தி.மு.கவை பலவீனப்படுத்தி மூன்று பிரிவுக ளாக்கியதும், சித்தாந்த ரீதியாக பா.ஜ.கவுடன் மிகவும் ஐக்கியமாக இருந்த மகாராஷ்டிரா சிவசேனையை இரண்டாக பிரிந்து ஏக்நாத்சிண்டேயை முதல்வ ராக்கியதும், அதேபோல் தேசியவாத காங்கிரஸை பிரிந்து அஜித்பவரை துணைமுதல் முதலமைச் சராகியதும், சில மாநிலங் களில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்தியதும் மோடி அரசின் அதிகார சர்வாதிகாரத் துஷ்பிரயோகங்கள். இவற்றின் விளைவே தேர்தலில் எதிரொலித்தது.

தேர்தல் பரப்புரையிலும் வகுப்பு வாதத்தையே முன் வைத்தனர். ஏழு கட்டமாக நடந்த தேர்தலில் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு விதமான மூன்றாம் தர கருத்தியலையே முன் கொண்டு சென்றனர்.

இதுவரை காலமும் இந்தியாவில் பிரதமராக இருந்த எவரும் இவ்வாறான பரப்புரையில் ஈடுபட்டவர்கள் இல்லை. ஒடிசாவிலே தமிழகத்தைச் சேர்ந்த வி.கே. பாண்டியனை இலக்கு வைத்து ஒடிசாவை தமிழர்கள் ஆளலாமோ என வெறுப்பு பேச்சையே பா.ஜ.க. முன்னெடுத்தது. அதன் விளைவே நவீன்பட்நாயக்கின் 24ஆண்டு கால ஆட்சியை முடிவுறுத்தியது. ஆந்திராவிலும் ஜெகன்மோகன்ரெட்டியின் ஆட்சியும் காணிசீர்திருத்ததால் முடிவுக்கு வந்தது.

400 இடங்களை வெல்வதே இலக்கு என்றனர் பா.ஜ.கவினர். உத்தரப்பிரதேசம் கைநழுவியது போல் மேற்குவங்கத்திலும், கடந்த முறை எடுத்த ஆசனத்தை விட குறைவாகவே கிட்டியது. தமிழ்நாடு, பஞ்சாப், மணிப்பூர், மிசோரம், சிக்கிம், புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் பா.ஜ.க. ஓர் ஆசனத்தைக் கூட பெற வில்லை. கேரளாவில் முதல் முறையாக நடிகர் ஒருவர் வெற்றி பெற்றுள்ளார். இந்துத்துவ வாதம் கை கொடுக்கவில்லை. ஆர்.எஸ்.எஸ்ஸின் மதவாத சித்தாந்தத்தை முன்னெடுத்த பா.ஜ.கவால் அதை இம்முறை வீயூகமாக வகுத்து வாக்காக மாற்ற முடியவில்லை. இந்து மதத் தலைவர்கள் இடத்தில் மதவாதம் இருக்கலாம். சாதாரண இந்துக்கள் இடத்தில் பெரும்பாலும் மதவாதம் இருந்ததில்லை.

கத்தோலிக்கர்களை, இஸ்லாமியர்களை ஒரு நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டுவர முடியும். அவர்களில் மிக அதிகமானோர் தேவால யங்களினதும் பள்ளிவாசல் களினதும் தீர்மானங்களைப் பின்பற்றுவார்கள். உலகம் முழு வதும் இந்துக்களை எவராலும் கட்டுப்படுத்த முடியாது.

இதற்கு உதாரணம் ஈழத்து சிவசேனை தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தன் பல்வேறு விதமான மதவெறுப்புக் கருத்து களை முன்னெடுப்புப் போராடு கிறார். அவரது மதவாதக் கருத் தியலையோ அவரது போராட்டத்தையோ ஒரு சிலரை தவிர எவரும் ஆதரிப்ப வர்களாக இல்லை.

கடந்த முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வன்னித் தொகுதியிலே மன்னாரைச் சேர்ந்த இந்து மத குரு ஒருவர் களமிறங்கினார். அதை சிவசேனையும் ஆதரித்தது ஆனால் வெறும் இரண்டாயிரம் வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. வன்னி வாக்காளர்களில் 65 வீதத்திற்குக்கு மேல் இந்துக்கள். வெற்றி பெற்ற நான்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கத்தோலிக்கர்களே. இது போன்றதுதான் மோடியின் இந்துத்துவத்திற்கும் விழுந்த பேரிடி. தமிழகத்திலும் பெரியாரின் பகுத்தறிவுக் கோட்பாடு கடந்த 50 ஆண்டுகளாக சனாதனிகளை உட்புக விடுவதில்லை.

மோடி கடந்த 2014,2019 தேர்தல்களை அடுத்து அறுதிப் பெரும்பான்மையுடன், எவரையும் மதிக்காமல் நடத்திய சர்வதிகார ஆட்சியை இம்முறை செய்ய முடியாது. வாஜ்பாய் 23 கட்சிகளுடன் கூட்டாட்சி நடத்தியமை போல் மோடி – அமித் ஷா இணையர்களால் அரவணைப்போடு ஆட்சி செய்ய முடியாது. கூட்டு என்பது காகங்கள் போல் கூடி கலைவது அல்ல. மேகங்கள் போல் இணைந்து மழை பொழிவது என்றார் அறிஞர் அண்ணா. ஐந்து ஆண்டுகள் ஆட்சியை தொடர்வதற்கு வாய்ப்பு மிகவும் குறைவு. இவர்கள் விரும்பும் சட்டமூலத்தை நிறைவேற்ற முடியாது. சாதாரண பெரும்பான்மைக்கு 34 ஆசனங்கள் தேவை. இதில் ஐக்கிய ஜனதாதளம், தெலுங்கு தேசம், ஏக்நாத் சிண்டேயின் சிவசேனை, லோக் ஜனசக்தி, ராஷ்டிரிய லோத்தளம், மதச்சார்பற்ற ஜனதா தளம்,

தொடர்ச்சி▼

# கலைந்தது மோடியின் விம்பம் கை கொடுக்காத மதவாதம்

தொடர்ச்சி▲

சில சுயேச்சைகள் – இத்தரப்புகளின் ஆதரவில் தான் ஆட்சியைத் தொடர போகிறார்கள்.

இதில் நிதீஷ்குமார், சந்திரபாபுநாயுடு, குமாரசாமி போன்றவர்கள் அரசியலில் பெரும் பலே கில்லாடிகள். தருணம் பார்த்து அணி மாறுவதிலும் வல்லவர்கள். மகாராஷ்டிராவில் மாநில தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. தேசியவாத காங்கிரஸ் அணிகள் இணை யக்கூடிய வாய்ப்பு உண்டு. சிலவேளை சிவசேனா அணிகளிலும் கூட அவ்வாறான ஒரு மாற்றம் ஏற் படலாம். அப்படி நிகழ்ந்தால் மத்தியிலும் பிரச்சினை ஏற்படும். காங்கிரஸூம் இவர்களுக்குள் உட்பூசல்களை ஏற்படுத்தும் சீனா அமெரிக்காம்போன்றவையும் தத்தமது முகவர்கள் ஊடாகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். ஒவ்வொரு நாளும் புதிய புதிய சவால்களை எதிர்கொள்ள வேண்டி வரலாம்.

ஒரு கட்டத்தில் மீண்டும் நாடாளுமன்றை நேரத்துடன் கலைக்க வேண்டிய நிலை ஏற்படலாம். அடுத்து வருகின்ற ஜனாதிபதி தேர்தல் கூட பா.ஜ.கவிற்கு சவாலாகவே அமையலாம். இதில் அகண்ட பாரதம், பொருளாதார முயற்சி, வல்லரசாகும் எண்ணம், தொழில்நுட்ப எழுச்சி எல்லாம் கனவாகவே போகக்கூடிய நிலை தோன்றலாம்.

ஊடகங்களை வைத்துக்கொண்டு கருத்துருவாக்க பிம்பத்தை கட்டமைத்து வெளிப்படுத்திய தேர்தலுக்கு முந்திய – பிந்திய கருத்துக்கணிப்புக்கள் யாவும் பொய்யாகின. இந்திய ஊடகங்களில் குறைந்தபட்ச நடுநிலைமை என்கின்ற எடுக்கோளுக்கு இடமில்லை. தமிழக ஊடகங்களும், அரசியல் விமர்சகர்களும், பத்திரிகையாளர்களும் அரசின் உத்தியோக பற்றற்ற பேச்சாளர்கள் போல்தான் ஊடகங்களில் பேசியும் எழுதியும் வருகிறார்கள். அந்த அளவிற்கு ஆதரவுத் தளத்தை மத்திய – மாநில அரசுகள் கட்டமைத்துள்ளன.

இதில் வெற்றி பெற்ற 251 நாடாளுமன்ற உறுப் பினர்கள் குற்றவியல் வழக்கு உள்ளவர்கள். பாலியல், கொலை, ஊழல் போன்ற வழக்குகளில் சிக்கிக் கொண்டுள்ளவர்க. எப்படி ஜனநாயகம் மிளிரும்?

இதில் ஏழு சுயேச்சைகள் வெற்றி பெற்றுள்ளன. அதில் மூவர் சிறையில் உள்ளனர். பஞ்சாபில் வெற்றி பெற்ற காலிஸ்தான் ஆதரவு தீவிரவாதி அம்ரித் பால் சிங் காதூர் சாகீப், இந்திராகாந்தியைக் கொன்ற பியாந்த் சிங் மகன் கால்சா பரீத்கோர்ட், காஷ்மீர் பயங்கரவாதிகளுக்கு நிதி உதவி செய்தார் என்று கைதாகி சிறையில் இருக்கும் ரஷீத் பாரமுல்லா போன்றோரும் உளர். இவர்கள் இலகுவாக ஜனநாயகக் கடமையாற்ற முடியுமா என்னும் கேள்வியும் உண்டு.

புதிய கூட்டாளிகளின் கோரிக்கையை மோடி எப்படி நிறைவேற்றப் போகிறார்? அக்கினிவீர் திட்டம், சாதி வாரிக் கணக்கெடுப்பு, பீகாருக்கு சிறப்பு அந்தஸ்து, பொது சிவில் சட்டம், ஆந்திராவுக்கு முன்னுரிமை, சபாநாயகர் பதவி உட்பட முக்கிய அமைச்சர் பதவி எனப் பல கோரிக்கைகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும் கூட்டுக் கட்சிகள் உள்ளன. இதனால் எழும் பிரச்சி னைகளை எல்லாம் எப்படி மோடி சமாளிக்க போகிறார்? இதில் காங்கிரஸ் தலைமையிலான இண்டியா கூட்டணி தனது தேர்தல் வியூகத்தை சரியாகப் பயன்படுத்தி நித்திஷ்குமாரை வெளியேறாமல் பார்த்திருந்தால் நிலைமை வேறுவிதமான முடிவுக்கு வந்திருக்கலாம். மேற்குவங்கத்தில் தனித்து மம்தா29 இடங்களை பெற்றார். உத்தரபிரதேசத்தில் சமாஜ்வாதி தன்னுடைய தந்திரமான வேட்பாளர் தெரிவால் தலித் வாக்குகளை பெற்று மாயாவதியை ஓர் இடத்தில் கூட வெல்ல முடி யாமல் அகற்றி, 38 இடங்களைப் பெற்றது. கடந்த தேர்தலை விட 48 இடங்களை காங்கிரஸ் வென்று இருந்தாலும் 8 மாநிலங்களில் அது ஓர் ஆசனம் கூடப் பெறவில்லை ஆந்திர பிரதேசம், அருணாச்சல் பிரதேசம், ஹிமாச்சல் பிரதேசம், மத்திய பிரதேசம், உத்திரகாண்ட், திரிபுரா, சீக்கியம், மிசோரம் அவை. தேர்தலுக்கு பிந்திய கருத்துக் கணிப்புகள் காங்கிரஸ் கட்சியை 100 இடங்களில் கூடக் காணவில்லை என ஆய்வாளர்களால் தெரிவிக்கப்பட்டிருந்ததும் உண்மையாகியது.

இவை எப்படி இருந்தாலும் காங்கிரஸ்க்கு இந்தத் தேர்தல் புத்துணர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. கடந்த 10 ஆண்டுகளாக தோல்வியடைந்திருந்த காங்கிரஸ் இம்முறை எதிர்க்கட்சி அந்தஸ்தையாவது பெற்றிருக்கிறது என்பது அவர்களுக்கு மகிழ்ச்சியே.

தமிழ்நாட்டில் மூன்று முனைப் போட்டி நிலவியதால் தி.மு.க. இலாபகரமாக வெற்றி பெற்றது. 2004, 2014லும் கூட இதுவே நிகழ்ந்தது.

அண்ணாமலையின் அரசியல் முதிர்ச்சியற்ற அதிபிரசங்கித்தனமான விமர்சனமே அ.தி.மு.க. கூட்டணி குழம்பக் காரணமாயிற்று. கூட்ட்ய் இருந் திருந்தால் குறைந்தபட்சம் 20 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றிருக்க முடியும்.

சீமான் வளர்ச்சி கவனிக்கத்தக்கதே. ஆனாலும் ஆட்சியைப் பிடிக்கும் அளவுக்கு இன்னும் மிக நீண்ட காலம் முயற்சிக்க வேண்டும். இதில் வாக்கு குறைந்தது தி.மு.கவுக்கு. ஏழு சதவீத வாக்கு கடந்த தேர்தலை விட குறைவடைந்துள்ளது.

இவற்றிற்கு அப்பால் பிராந்திய நலன்களை மூன்றாவது முறை ஆட்சிக்கு வரும் மோடி அரசு எப்படி கையாள போகிறது? அதில் ஈழத் தமிழர் விட யத்தை எப்படி நோக்கப் போகிறது? எல்லை தாண்டிய மீனவர்கள் விவகாரம், கச்சதீவு, அதானி முதலீடு, தீவுப் பகுதிகளில் திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற விடயங்களை எவ்வாறு கையாளப்போகிறது? கடந்த காலத்தை போல் – இரு வேறு நிலைப்பாடுகளில் சூழ்ச்சி செய்து தமிழ் மக்களின் விடயங்களை பிரித்து கையாண்டது போல் – இந்த ஆட்சியிலும் அவ்வாறான ஒரு சூழ்ச்சிகரமான தந்திரத்தையே இந்தியா மேற்கொள்ளும். இதயசுத்தியாக ஈழத் தமிழர் விடயத்தில் ஒருபோதும் இந்தியா செயல்பட்டதுமில்லை, செயல்பட போவதுமில்லை.

இங்கு இருக்கின்ற இந்திய நலன் விசுவாசிகள் எவ்வளவு தான் வரிந்து கட்டினாலும், தமிழ்த் தேசியம் எனும் போர்வையிலே 13க்கு ஆதரவான கட்சிகள் இந்தியாவின் நிலைப்பாட்டில் மிக தீவிர ஆதரவோடு இருந்தாலும் கூட, இந்தியா எங்கள் விடயத்தில் மாற்றான் தாய் மனப்பான்மையையே தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது. ஆகவே அவர்களிடம் இருந்து நமக்கான தீர்வை நீதியான முறையில் எதிர்பார்க்க முடியாது.

மோடிக்குக் கூட்டிலும் ஆட்சியிலும் சவாலே உண்டு. இவற்றையெல்லாம் கடந்து வீறு நடை போடுவாரா மோடி என்பது மில்லியன் டொலர் கேள்வி. இக்கேள்விக்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.



# ‘தமிழ் மக்கள் பொதுச்சபை’

# இன்னொரு ‘பேரவை’ ஆகக்கூடாது!



புருஜோத்தமன் தங்கமயில்

யாழ்ப்பாணத்தில் கடந்த புதன்கிழமை கூடிய தமிழ் சிவில் சமூகக் கட்டமைப்பினர், தங்களை ‘தமிழ் மக்கள் பொதுச்சபை’யாக அடையாளப் படுத்தி அறிவித்துள்ளனர். ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை முன்னிறுத்துவது தொடர்பிலான உரையாடல் களம், தமிழ் மக்கள் பொதுச் சபை என்ற சிவில் சமூக அமைப்பொன்றை ஆரம்பிப்பதற்கான காரணியாக இருந்திருக்கின்றது என்பதை ஆரம்பத்திலேயே வரவேற்கலாம். ஏனெனில், யாழ்ப்பாணத்தில் சிவில் சமூக இயக்கங்கள் – அமைப்புக்கள் என்ற பெயர்களில் ஆரம்பிக்கப்படும் அனைத்துக் கட்டமைப்புக்களிலும் புலமையாளர்கள், வைத்தியர்கள், அரசியல் பத்தியாளர்கள், சமயத்துறவிகள் உள்ளடங்கிய பிரமுகர்களே அதிகம் அங்கம் வகித்திருக்கிறார்கள். அவர்கள், காலத்துக்கு காலம் சிவில் சமூக அமைப்புக்களின் பெயர்களை மாத்திரம் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மற்றப்படி, அவர்களின் செயற்பாடுகளில் எந்தவித மாற்றமும் இருப்பதில்லை. ஏனெனில், அவர்கள் பருவகாலப் பறவைகள் போன்றவர்கள். தேர்தல்கள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் உள்ளிட்ட காலங்களில் மாத்திரம், தமிழர் தேசத்தில் பறப்பார்கள். அவை முடிந்ததும் தங்களின் கூடுகளுக்கு திரும்பிவிடுவார்கள். அத்தோடு, அவர்களிடம் எந்தவித செயற்திட்டங்களும், அதனை செயற்படுத்துவதற்கான அர்ப்பணிப்புக்களும் இதுவரை காலமும் இருந்ததில்லை. ஆனால், வழக்கத்துக்கு மாறாக இம்முறை தமிழ்ப் பொது வேட்பாளரை எப்படியாவது நிறுத்திவிட வேண்டும் என்கிற ஆவேசத்தை அவர்களிடத்தில் காண முடிகிறது. அதுவும், தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள் கிராமிய சங்கங்கள், கடற்றொழில் அமைப்புக்கள் தொடங்கி சாதாரண மக்களோடு நாளாந்தம் நகமும் சதையுமாக ஊடாடும் சமூகக் கட்டமைப்பின் ஆகச் சிறந்த குழுக்களையெல்லாம், இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால்தான், தமிழ் மக்கள் பொதுச்சபையை இந்தப் பத்தியாளர் ஆரம்பத்திலேயே வரவேற்றார்.

முள்ளிவாய்க்கால் முடிவுகளுக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில், கட்சிகளைக் காட்டிலும் அதிகம் தோற்றுப்போன கட்டமைப்பாக தமிழ் சிவில் சமூகக் கட்டமைப்பைச் சொல்லிக் கொள்ளலாம். குறிப்பாக, தமிழ் மக்கள் பேரவை என்ற அரசியல்வாதிகளும் பிரமுகர்களும் அடங்கிய அமைப்பு, தமிழ் சிவில் சமூக வெளியை ஒட்டுமொத்தமாக கபளீகரம் செய்துவிட்டு, காணாமற்போனது. அந்த அமைப்பின் அதிகபட்ச அடைவாக சி.வி.விக்னேஸ்வரனுக்கு கட்சியை ஆரம்பித்துக் கொடுத்ததையும், உதிரி வாக்குகளைக் கொண்டு அவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்பியதையும் சொல்ல முடியும். மற்றப்படி ‘எழுக தமிழ்’ இற்குப் பின்னராக தமிழ் மக்களின் திரட்சியைக் கிட்டத்தட்டக் காட்டிக் கொடுத்துவிட்டு காணாமற்போனார்கள். 2000ஆம் ஆண்டுக்குப் பின்னரான தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டக் களத்தில், ‘பொங்கு தமிழ்’ இன் எழுச்சி மிக உச்சமானது. அது, ஆயுதப் போராட்ட வெற்றிகளின் தொடர் எழுச்சி. அதன்பின்னர், வடக்கு கிழக்கில் போராட்டக்களத்தில் மக்கள் திரட்சியைக் காட்ட முடியும் என்பதற்கு ‘எழுக தமிழ்’ குறிப்பிட்டளவு சான்றாக அமைந்தது. ஆனால், அதனை சரியான வழியில் அடுத்த கட்டத்திற்கு நகர்த்தாது, விக்னேஸ்வரனை முன்னிறுத்துதல் என்ற அளவில் சுருங்

தொடர்ச்சி ▼

# ‘தமிழ் மக்கள் பொதுச்சபை’

# இன்னொரு ‘பேரவை’ ஆகக்கூடாது!

தொடர்ச்சி ▲

கிக் கொண்டதன் விளைவாக, தமிழ் மக்களின் போராட்டக்களம் வறண்டு போனது. அடுத்து குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய திரட்சி என்றால், ‘பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி’ வரையிலான பேரணியைச் சொல்ல முடியும். அதுவும் வேலன் சுவமி என்று தன்னை முன்னிறுத்தும் நபர் உள்ளடக்கிய சில சுயநல வாதிகளினால் இடைநடுவில் அதன் இலக்குகள் மாற்றப்பட்டு, இறுதியில் குழப்பத்துடன் முடிந்தது. அத்தோடு, தங்களின் இருப்புக்காக வேலன் சுவாமியும் இன்னும் சிலரும் அந்தப் பேரணிக்கான பெயரை இறுதியில் அபகரித்துக் கொண்டோடியதும் நடந்தது.

இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற தமிழ் மக்கள் பொதுச்சபைக்குள்ளும் தமிழ் மக்கள் பேரவையில் இருந்த முக்கிய பிரமுகர்களே பிரதான பாத்திரம் வகிக்கிறார்கள். கடந்த காலங்களில் சிவில் சமூக அமைப்புக்கள் என்ற பெயரில் ஆரம்பித்துவிட்டு இடைநடுவில் விட்டு ஓடியது போலல்லாது, எதிர்காலத்தில் தமிழ் மக்கள் பொதுச்சபையை ஒரு செயற்பாட்டு அமைப்பாக தொடர்ந்தும் வழிநடத்த வேண்டும். மாறாக, தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற ஒற்றை இலக்குக்காக மாத்திரம்,ஓர் அமைப்பை ஆரம்பிப்பதும், அதனைக் கைவிடுவதும் அர்த்தமற்றது. ஏனெனில், தமிழ்ச் சூழலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்கிற முன்னெடுப்பு, அதன் இலக்குகள் சார்ந்து வெற்றியளிக்கக் கூடிய எந்தவித சாத்தியப்பாடுகளையும் காட்டவில்லை. அதற்கான களமும் சூழலும் கூட தற்போது இல்லை. தமிழ்த் தேசிய விடுதலை நோக்கிய பயணம் என்பது வெற்றிகளினால் பலம் பெற்றதல்ல. தொடர் தோல்விகளில் இருந்து கற்ற பாடங்களைக் கொண்டு பலம் பெற்றது. அப்படியான சூழலில், பொது வேட்பாளர் விடயம், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் கட்டத்திற்கு நகர்ந்தாலும் இல்லையென்றாலும், சிலவேளை போட்டியிட்டு வாக்குக-ளைப் பெறாது, இலக்குகளைத் தவற விட்டாலும், தமிழ் மக்கள் பொதுச்சபையினர் நம்பிக்கைகளை இழந்துவிடக்கூடாது. தொடர்ந்தும் தமிழ்த் தேசிய அரசியலில் செயற்பாட்டுத்தளத்தில் முன்னோக்கி நகர வேண்டும். இல்லையென்றால், ஏற்கனவே தோற்றுப்போன சிவில் சமூக வெளியை, புதைகுழிக்குள் இருந்து தேட எடுக்க வேண்டி வரும். அப்படியான சூழல் ஏற்பட்டால் எதிர்கால சமூகத்திற்கு சிவில் சமூக வெளியை கடத்தாமல் போனமைக்காக, இன்று வரிந்து கட்டிக் கொண்டு பத்தி எழுதும் மூத்தவர்கள் எல்லாமும் பொறுப்பேற்க வேண்டி வரும். ஏனெனில், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் கருத்துருவாக்கிகள் என்ற கட்டத்தில் தங்களை முன்னிறுத்துபவர்களில் அநேகர் அரசியல் பத்திகளை எழுதுகிறார்கள். இவர்களின் கடந்த கால சாதனைகளாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சி.வி.விக்னேஸ்வரனை முன்னிறுத்தியமையைச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால், அது கடந்த பதினைந்து ஆண்டுகால அபத்தம்.

கடந்த வாரம் வரையில், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முடிவுக்காக ரெலோவும், புளொட்டும் காத்துக் கொண்டிருந்தன. ஆனால், எந்த அதிசயம் நிகழ்ந்ததோ, இரு கட்சிகளும் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்துக்கு ஆதரவளிப்பதற்காக அறிக்கைகள் மூலமாக அறிவித்துவிட்டன. தமிழ் மக்கள் பொதுச் சபையைப் பொறுத்தளவில் இது வெற்றிதான். ஏனெனில், அதற்கு முதல் வாரங்களில், பொது வேட்பாளர் விடயத்தை பொறுப்பற்ற ரீதியில் தமிழ் மக்கள் பொதுச்சபையின் பிரமுகர்கள் முன்னெடுப்பதாக அவர்களிடத்திலேயே ரெலோவும், புளொட்டும் விசனப்பட்டன. அதிலும், குறிப்பாக, பொது வேட்பாளர் விடயத்துக்கான ஆதரவை, தமிழ் மக்களை உசுப்பேற்றுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்று அரசியல் பத்தியாளர்கள் அடங்கிய பிரமுகர்கள் குழு கூறிய போது, ரெலோ, புளொட்டின் தலைமைகள் பொறுமையிழந்த சம்பவங்கள் எல்லாமும் நிகழ்ந்தன. அதுமட்டுமன்றி, தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்க

தொடர்ச்சி ▼



# ‘தமிழ் மக்கள் பொதுச்சபை’

# இன்னொரு ‘பேரவை’ ஆகக்கூடாது!

தொடர்ச்சி▲

ளிடம் கூட, தமிழ் மக்கள் பொதுச் சபையில் பத்தியாளர்களின் சிறுபிள்ளைத்தனங்கள் குறித்து ஆதங்கப்பட்டதெல்லாம் நிகழ்ந்தன. ஆனால், அதன்பின்னரான நாள்களில் எங்கிருந்து என்ன ஞானோதயம் ரெலோவுக்கும் புளொட்டுக்கும் கிடைத்தன என்று தெரியவில்லை. திடீரென்று பொது வேட்பாளருக்கு ஆதரவு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். சில வேளை இன்னும் சில நாள்களில் அந்த ஞானோதயத்தின் உரித்தாளர்கள் யார் என்பது வெளிவரலாம்.

தோல்வி இறுதியானது என்று தெரிந்த பின்னர், அந்தக் களத்தைத் தவிர்ப்பது அரசியல் இராஜதந்திரத்தில் அடிப்படையானது. அதனை, அரசறிவியலாளர்கள் அறியாமல் இருப்பதை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தினை மக்களை உசுப்பேற்றுவதன் மூலம் சாதித்துக் கொள்ளலாம் என்ற அரசியல் புரிதலை கொண்டிருப்பவர்கள் தமிழ்ச் சமூகத்தின் பெரும் ஆபத்தை விளைவிக்கக் கூடியவர்கள். இதுவொன்றும் ஆயுதப் போராட்டக்களம் அல்ல. அதில்கூட உசுப்பேற்றுதல் எந்த விதமான ஆரோக்கியமான பங்கினையும் வகிக்காது. தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் வெற்றிக் கணங்கள் அர்ப்பணிப்பு மற்றும் சமயோசித்ததினால் நிகழ்ந்தவை. இன்றைக்கு அந்தக் கணங்கள் எங்களிடத்தில் இல்லை. அப்படியான கட்டத்தில் உசுப்பேற்றுதல் என்ற நிலையை அரசியல் செல்நெறியாக வரிந்து கொள்ள முற்படுபவர்களை கவனமாக கையாள வேண்டும். ஏனெனில், கடந்த காலங்களில் உசுப்பேற்றும் அரசியலில் ஈடுபட்ட அரசியல்வாதிகளும் அவர்களுக்காக வரிந்து நின்று எழுதியவர்களும் பெரிதாக எந்தவித பாதிப்புக்களும் இன்றி தப்பித்துக் கொண்டுவிட்டார்கள். ஆனால், அவர்களின் உசுப்பேற்றுதல்களில் அடியுண்ட சாதாரண மக்கள்தான் வாழ்க்கையைத் தொலைத்தார்கள். இன்னும் சில தசாப்தங்களுக்கு மீண்டெழ முடியாத பின்னடைவுகளோடு அல்லாடுகிறார்கள். எந்தச் சூழலிலும் எவர் யாராகினும் உசுப்பேற்றும் அரசியலுக்கு இடமளிக்கக் கூடாது. இப்போது, உசுப்பேற்றி காரியங்களைச் சாதிக்கலாம் என்று களத்தை கையாள முற்படுபவர்கள், ஒரு போதும் களத்தில் நின்றவர்கள் இல்லை. அவர்கள், தாயக மக்களுக்காக நின்றதைக் காட்டிலும், வெளித்தரப்புக்களின் நிகழ்ச்சி நிரலுக்காக இயங்கியமையே அதிகமாகும். தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை தாயக மக்கள் கணக்கில் எடுக்கவில்லை. எடுக்கவும் போவதில்லை. ஆனால், புலம்பெயர் தேசங்களில் உள்ள சில அமைப்புக்களினதும், சில தனிநபர்களினதும் தேவை பொது வேட்பாளராக இருக்கின்றது. அது, தாயக மக்களின் வெற்றிகளைக் குறித்தானது அல்ல.

அரசியல் விடுதலைப் போராட்டத்தை நடத்தும் எந்த மக்கள் கூட்டமும் தன்னுடைய சிவில் சமூக வெளியை ஆரோக்கியமாக பேண வேண்டும். அது, அரசியல் கட்சிகளையும் இயக்கங்களையும் வழிப்படுத்தும் அளவுக்கு இருக்க வேண்டும். மக்கள் சார்ந்து தவறான முடிவுகள் எடுக்கப்படும் போது, அதனை சுட்டிக்காட்டி மக்களை விழிப்புணர்வூட்ட வேண்டும். ஆனால், தமிழ்ச் சிவில் சமூக வெளி பருவகாலப் பறவைகள் போன்றவர்களினால் நிரம்புவதும், அவர்கள் மக்களை வழிப்படுத்துவதைக் காட்டிலும் உசுப்பேற்றுதல் குறித்து சிந்திப்பதாலும் அவதானமாக இருக்க வேண்டியிருக்கின்றது. இந்த இடத்தில் தமிழ் மக்கள் மாத்திரமல்ல, அரசியல் கட்சிகளும் தலைவர்களும் கூட கவனமாக இருக்க வேண்டும். மாறாக, குறுகிய சுயநல இலக்குகளுக்காக அரசியல் தலைவர்கள் செயற்பட்டால், அதன் விளைவுகள் இன்னும் மோசமாக மாறும். அப்போது, தமிழ்த் தேசிய அரசியலின் சிதைவு என்பது இன்னும் மோசமாக இருக்கும்.

தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துவது தொடர்பிலான உரையாடல் தமிழ் மக்கள் பேரவைக்குள் கடந்த ஆண்டு இடம்பெற்றதாக தமிழ் மக்கள் பொதுச்சபையின் பேச்சாளர் கூறியிருக்கின்றார். தமிழ் மக்கள் பேரவை, விக்னேஸ்வரனுக்கு கட்சியை ஆரம்பித்துக் கொடுத்த நாளோடு காணாமற்போய்விட்டது. செயற்பாட்டுக்களத்திலேயே இல்லாத பேரவை, எப்போது எந்த உலகத்தில் பொது வேட்பாளர் தொடர்பிலான உரையாடல்களை நடத்தியது என்றும் தெரியவில்லை. சிலவேளை, பொது மக்கள் சபையின் பேச்சாளர், எல்லா இடத்திலும் இருக்கும் பிரமுகர்கள் குழு ஒன்றுதான் என்ற நிலையில், அதனைத் தெரிவித்திருந்தால், அந்த விடயத்தைக் கண்டுகொள்ளாமல் விடலாம். ஏனெனில், தொடர்ந்து கேள்வி எழுப்பினாலோ, எதிர்க் கருத்துக்களை வைத்தாலே அவர்கள் எரிச்சலடைந்து, தனிப்பட்ட தாக்குதல்களுக்குச் சென்று விடுவார்கள். கடந்த நாள்களில் பொது வேட்பாளர் விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பியவர்களுக்கு எதிராக ‘துரோகிகள்’, ‘படிப்பறிவற்றவர்கள்’ என்ற அடையாளப் படுத்தல்களையெல்லாம் செய்து வருகிறார்கள். தமிழ்ச் சூழலில் துரோகிகள் என்ற வார்த்தை அர்த்தம் இழந்து நீண்டகாலமாகிவிட்டது. கடந்த கால துரோகிகள் பின்னரான காலத்தில் மாமனிதர்கள் ஆனதெல்லாம் வரலாறு.

தமிழ் மக்கள் பொதுச்சபை என்று கவர்ச்சிகரமான பெயரை மாத்திரம் சூட்டிக்கொண்டால் போதாது, அந்தச் சபை மக்களின் அரசியல் இருப்புக்காக தொடர்ந்தும் சமரசங்கள் இன்றி செயற்பட வேண்டும். அதுபோல, தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் நின்று செயற்பட வேண்டும். மாறாக, தமிழ் மக்கள் பேரவையின் கடந்த கால அபத்தங்களை தொடர்ந்தும் அரங்கேற்றும் இன்னொரு அமைப்பாக தமிழ் மக்கள் பொதுச்சபை ஒருபோதும் இருக்கக்கூடாது.




# ரயில் சாரதிகள் தொடர்ந்தும் வேலை நிறுத்தப் போராட்டம்

ரயில் சாரதிகள் ஆரம்பித்துள்ள வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்கின்றது.

கொழும்பிலுள்ள 2 ரயில்வே பணிமனைகளில் இருந்து ரயில்கள் இயக்கப்படவில்லையென லொகோமோட்டிவ் ஒப்பரேட்டிவ் பொறியியலாளர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.ஆர்.சி. எம் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பளம் வழங்கப்படாமை, பதவி உயர்வின்மை, ஆள்சேர்ப்பு இன்மை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

கிராமிய வீதிகள், கிராமிய பாலங்கள் அமைப்பதில் இருந்து தமது உறுப்பினர்கள் விலகி இருக்கின்றனர் என சங்கத்தின் உப தலைவர் நிலந்த விஜேசேன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்டுள்ள தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் 38 ஆவது நாளாகவும் தொடர்கிறது.

# ஹர்ஷ டி சில்வாவிடம் சி.ஐ.டி. வாக்குமூலம்



தமக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறியமை தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பெறப்பவுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அரசாங்க பொது நிதி பற்றிய குழுவின் தலைவர் என்ற வகையில் தமக்கு வெவ்வேறு தரப்பிலிருந்து அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த நிலையில் , மேற்படி விடயம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதற்கமைய இந்த சம்பவம் தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பெற வேண்டிய தேவை உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அறியப்படுத்தியுள்ளது.

# இரு அமைச்சுகளுக்கு புதிய செயலாளர்கள்

இரு அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்களை நியமித்து அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சின் செயலாளராக எச்.எம்.பி.பி.ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் செயலாளராக சோமரத்ன விதானபத்திரண நியமிக்கப்பட்டுள்ளார் என ஜனாதிபதி செயலாளர் ஈ.எம்.எஸ்.பி. ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த் தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கடுவெல பகுதிக்கு சாகல விஜயம்

சீரற்ற காலநிலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் பழைய சுற்று நிருபங்களுக்கு அப்பாற்பட்டு புதிய சுற்று நிருபங்களின் பிரகாரம் செயற்படுமாறு அதிகாரிகளுக்குபணிப்புரைவழங்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட கடுவெல பிரதேச மக்களின் நலன்கள் மற்றும் அந்த மக்களுக்கான நிவாரண வேலைத்திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்றுக் கண்காணிப்பு விஜயத்தில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வெள்ளம் வடிந்ததன் பின்னர் மக்களின் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்கும் வேலைத்திட்டத்தை பார்வையிட்டமையுடன், மக்களை மீள்குடியேற்றுவதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்குமாறு சாகல ரத்நாயக்க, அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள வீடுகளைப் பார்வையிட்ட சாகல ரத்நாயக்க, வீட்டு உரிமையாளர்களுடன் உரையாடலில் ஈடுபட்டுள்ளார். எதிர்காலத்தில் இவ்வாறான வெள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவர் கலந்துரையாடினார்.

இதேவேளை, கடுவெல வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீ ரன்கடு பத்தினி விகாரை வளாகத்தில் வெளிநாட்டு வைத்தியக் குழுவின் பங்குபற்றுதலுடன் நடைபெறும் வைத்திய முகாமையும் சாகல ரத்நாயக்க பார்வையிட்டார்.



இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த சாகல ரத்நாயக்க –

“அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். அவர் வழங்கிய அறிவுறுத்தல்களின்படி அவ்வப்போது பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று வருகிறோம். மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணியை வினைத்திறனாக்க தேவையான தீர்மானங்களை எடுக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கியுள்ளோம்.

அத்தகைய முடிவுகளை எடுக்க முடியாத சந்தர்ப்பங்களில், இறுதி முடிவை எடுக்க மேல்முறையீட்டுக் குழுவிடம் சமர்ப்பித்து இறுதித் தீர்மானம் எடுக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடுகள் அனைத்தும் பாதிக்கப்பட்ட மக்கள் விரைவில் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்புவதற்குத் தேவையான பின்னணியை வழங்கவே எதிர்பார்க்கின்றோம்.

நம் நாட்டில் பல சம்பள முரண்பாடுகள் உருவாகியுள்ளன. ஒழுங்கு முறையில் சம்பள ஏற்பாடுகள் செய்யாததாலும், பல்வேறு காலகட்டங்களில் துரித பதில்களை வழங்க நடவடிக்கை எடுத்தமையும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சம்பள முரண்பாடு குறித்து முறையான ஆய்வு நடத்தி அறிக்கை தயாரிக்க கடந்த அமைச்சரவையில் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. அந்த நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நடைபெறும்.

ஆனால் இது மக்கள் சிரமப்படும் சந்தர்ப்பம். நாடு பெரும் பொருளாதார சிக்கலை எதிர்கொண்டு, மீண்டும் பொருளாதார ரீதியில் ஸ்திர நிலைமையை அடைந்திருந்தாலும், அனைவரும் அவதானமாக இருக்க வேண்டும். எனவே, வேலைநிறுத்தம் செய்வதற்கு இது சரியான நேரம் அல்ல. அனைத்து அரச அதிகாரிகளும் இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டு செயல்படுமாறு கேட்டுக்கொள்கிறேன். உங்கள் பிரச்சினைகளை நாம் ஒருபோதும் புறக்கணிக்க மாட்டோம். அதுபற்றிய புரிதல் எமக்கு உள்ளதுடன் அவற்றைத் தீர்ப்பதற்குத் தேவையான வேலைத் திட்டத்தையும் தயாரித்துள்ளோம்.” – என்றார்.











# யாழ் பிரதம செயலர் அலுவலகத்தில் யோகா செயல் விளக்க நிகழ்வுகள்

2024 ஆம் ஆண்டு சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகம் ஜுன் 6 ஆம் திகதி இரண்டு யோகா செயல்விளக்க நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தது.

முதலாவது நிகழ்வு யாழ்ப்பாணம் தலைமைச் செயலக அலுவலகத்தில் காலை 7:00 மணி முதல் 8:00 மணி வரையிலும், இரண்டாவது நிகழ்வு தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் காலை 9:00 மணி முதல் 11:00 மணி வரையிலும் நடைபெற்றன.

நிகழ்வுகளில் துணைத் தூதுவர் சாய் முரளி, ராம் மகேஷ், வடமாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், உதவிப் பிரதம செயலாளர் திருமதி அன்னெட் நிந்துஷா, மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுஜீவா சிவதாஸ், மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பி.வாகேசன், மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் ஏ. லதுமீரா மற்றும் செயலகத்தின் ஊழியர்கள் பங்குபற்றினர்.

துணைத் தூதுவர் சாய் முரளி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து, பங்கேற்பாளர்களை உற்சாகப்படுத்தினார். அவர் யோகா பயிற்சி செய்வதன் பல நன்மைகளை எடுத்துரைத்தார். வடக்கு மாகாணத்தில் உள்ள பல்வேறு துறைகளில் சாத்தியமான எதிர்கால ஒத்துழைப்புகள் பற்றி பேசினார். வடமாகாண தலைமைச் செயலக அலுவலகத்தின் சிறப்பான ஏற்பாடுகளுக்காக அவர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

தலைமைச் செயலக அலுவலகத்தில் நடந்த முதல் நிகழ்வில் சுமார் 50 ஊழியர்கள் கலந்துகொண்டனர். கேட்போர் கூடத்தில் இரண்டாவது நிகழ்வாக பாசையூரில் இருந்து ஆயுர்வேத மருத்துவ அதிகாரி டாக்டர் அனுசுயா அவர்களால் நடத்தப்பட்ட ‘ஆரோக்கியமான வாழ்க்கைக்கான சிகிச்சை யோகா’ என்ற யோகா பட்டறை இடம்பெற்றது. ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் பேணுவதற்காக யோகாவின் சிகிச்சை அம்சங்களைக் கற்றுக்கொள்வதில் ஈடுபட்டிருந்த 150 உறுப்பினர்களின் பங்கேற்பை இந்த பட்டறை கண்டது.
















# வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் குடும்பம் மட்டக்களப்பில் தீமிதிப்பு நிகழ்வில் பங்கேற்பு

**(பழுவூரான், எம்.ஏ.ஏ.அக்தார்)**

கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு புன்னைச் சோலை பத்திரகாளியம்மன் ஆலய தீமிதிப்பு பல்லாயிரக்கணக்கான பக்த அடியார்கள் புடைசூழ நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக நடந்தேறியது.

இதன்போது பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றும் பொருட்டு தீமிதிப்பில் கலந்து கொண்டனர்.

அத்தோடு வெளிநாட்டிலிருந்து வருகை தந்த பக்த அடியார்களும் தீமிதிப்பில் ஈடுபட்டமை சிறப்பம்சமாகும்.

மட்டக்களப்பு பிரதேசத்திற்கு வருகை தந்திருந்த வெளிநாட்டு உல்லாசப் பிரயாணி குடும்பத்தினர் இந்துக்களில் கலாச்சார நிகழ்வுகளின் பால் ஈர்கப் பட்டுள்ளனர்.

இவர்கள் மட்டக்களப்பு புன்னைச் சோலை கோவிலில் இடம்பெற்ற தீமிதித்தல் நிகழ்வில் பங்கேற்று அம்பாளின் அருள்பெற பிரார்தனையில் ஈடுபட்டனர்.

இவ்வாலய உற்சவம் கடந்த ஞாயிற் றுக்கிழமை திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பமாகி நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவுபெற்றமௌ குறிப்பிடத்தக்கது.













# 102 தாதியர்களுக்கு நேற்று மட்டக்களப்பில் பட்டமளிப்பு

**(பழுவூரான்)**

மட்டக்களப்பில் ஐவா தாதியர் பாடசாலை மாணவர்களுக்கு பட்டமளித்துத் தொப்பி அணிவிக்கும் நிகழ்வு ஐவா நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் வசிம் மன்சூர் தலைமையில் தேவநாயகம் மண்டபத்தில் நேற்று சனிக்கிழமை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

இதன் போது ஐவா தாதியர் பயிற்சிப் பாடசாலையில் கல்வி கற்று 102 தாதியர்களுக்கு பட்டமளித்து தொப்பி அணிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டப் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் எஸ். முரளீஸ்வரன், கூட்டுறவு வைத்தியசாலைப் பணிப்பாளர் லத்திப் , விரிவுரையாளர்கள், மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளுக்கு நினைவுச் சின்னங்கள் வழங்கி அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.















# காசல்ரீ - மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் நிரம்பி வழியும் அளவை அடைந்தது

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக காசல்ரீ மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் நிரம்பி வழியும் மட்டத்தை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய விமலசுரேந்திர, லக்ச பான, நவ லக்சபான, கெனியன் மற்றும் பொல்பிட்டிய நீர் மின் உற்பத்தி நிலையங்களில் தற்போது அதிகபட்ச கொள்ளளவில் மின்சார உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் பல ஆறுகளின் நீர்மட் டம் படிப்படியாகக் குறைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

களுகங்கை, குடாஓயா மற்றும் ஜின்கங்கை ஆகிய ஆறுகளின் நீர் மட்டம் குறைவடைந்துள்ளதாக அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாணாதுகமவுக்கு அருகில் நில்வலா கங்கையின் நீர்மட்டம் சற்று அதிகரித் துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நபரொருவர் திடீரென்று உயிரிழந்தமையினால் மஸ்கெலியா ஆஸ்பத்திரியில் அமைதியின்மை

**(பொகவந்தலாவ நிருபர்: எஸ் சதீஸ்)**

மஸ்கெலியா குயின்ஸ்லேன்ட் தோட்ட பகுதியில் நபரொருவர் சுகயினம் காரணமாகத் திடீரென உயிர்ழந்த சம்பவம் தொடர்பில் மஸ்கெலியா வைத் தியசாலைக்குச் சென்ற பொதுமக்களுக் கும் வைத்தியசாலையின் உத்தியோ கத்தர்களுக்கிடையில் முரண்பாடு ஏற்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை வேலையில் இடம்பெற்றதாக மஸ் கெலியா பொலி ஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தெரிய வருதாவது:-

மஸ்கெலியா குயின்ஸ்லேன்ட் தோட்ட பகுதியில் வசித்து வந்த 32 வயதுடைய 03பிள்ளைகளின் தந்தை ஒருவருக்கு திடீர் சுகயினம் ஏற்பட்ட மையினால் அவரை வைத்தியசாலைக் குக் கொண்டு சென்று அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்தனர். இருந்த போதும் 30 நிமிடங்களுக்கு மேல் அந்த நோயா ளிக்கு எவ்வித சிகிச்சையும் அளிக்கப் படவில்லை எனவும் அந்த சந்தர்ப்பத்தில் அங்கு வைத்தியர் இல்லை எனவும் அந்நபர் உயிர்ழந்த பின்னரே வைத் தியர் வந்தார் எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.


இந்தச் சம்பவம் தொடர்பில் மஸ்கெ லியா வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி தெரிவிக்கையில் – எமது வைத்தியசாலையில் அனுபவம் உள்ள உத்தியோகத்தர்கள் உள்ளனர். இந்த நோயாளியை வைத்தியசாலைக்கு கொண்டு வரும் போது அவர் உயிரிழந்த நிலையில்தான் கொண்டுவரப்பட்டார் என வைத்திய அதிகாரி குறிப்பிட் டார்.

உயிர்ழந்தவரின் பிரேத பரிசோதனை டிக்கோயா கிழங்கன் வைத்தியசாலை யில் இடம்பெற்ற பின்னர் சடலம் உற வினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதோடு குறித்த நபர் நெஞ்சு் வருத்தம் கார ணமாக உயிர்ழந்துள்ளார் என பிரேத பரிசோதனையில்தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.





# இன்றைய ராசி பலன்கள் - 09.06.2024


மேஷம்

இன்று சிறப்பாக வளர்ச்சி காண்பீர்கள். உங்கள் திறமைகளை நிரூபிக்கும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் நம்பிக்கை காணப்படும்.

பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் திறமையை பயன்படுத்தி நன்மை அடைவீர்கள் மற்றும் இலக்குகளை குறித்தநேரத்தில் அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறப்பாக நேரத்தை செலவிடுவீர்கள். இருவரும் வெளியிடங்களுக்கு சென்று மகிழும் வாய்ப்பு உள்ளது.

சிறு கடன் வகையில் இன்று பண வரவு ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள போதிய அளவு பணம் காணப்படும்.


ரிஷபம்

இன்று நீங்கள் மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் காணப்படுவீர்கள். பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்களின் நட்பு பட்டியலில் கூடுதல் நண்பர்கள் இடம் பெறுவார்கள்.

உங்கள் பணியில் முன்னேற்றம் காண்பீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் தொடர்பாடல் திறன் உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை மேம்படுத்துவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் இன்று உங்களுக்கு பண வரவு காணப்படும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


மிதுனம்

இன்று பாதுகாப்பின்மை உணர்வு நிரம்பி காணப்படும். எனவே எந்த விஷயத்தையும் நீங்கள் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

பணியிடத்தில் அதிக பொறுப்புகள் காணப்படும். பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது உங்கள் ஆர்வத்தை மேம்படுத்த உதவும்.

நீங்கள் உங்கள் உறவில் உள்ள பிரச்சினையை தீர்ப்பதில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் துணையிடம் இது பற்றி பேசுவீர்கள்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வாய்ப்பு குறைவு. உங்கள் செலவுகளை கண்காணிக்கவும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.


கடகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண போராட வேண்டும். தியானம் அல்லது யோகா பயில்வதன் மூலம் பதட்டத்தை சமாளிக்கலாம்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பதட்டத்தை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் தவறு காண்பீர்கள்.இதனால் விரோதம் விளையும். இதனை சமாளிக்க முயல வேண்டும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிக்க நீங்கள் கண்டிப்பான திட்டம் மேற்கொள்ள வேண்டும்.

சளி மற்றும் தலை வலி காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.


சிம்மம்

எதிர்மறை எண்ணங்கள் உங்கள் நம்பிக்கையை குலைக்கும். நீங்கள் நம்பிக்கை உணர்வை மேற்கொள்ள வேண்டும்.

மந்தமான சூழ்நிலை காணப்படும். உங்கள் செயல்திறன் மூலம் இந்த நாளை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொள்ளலாம்.

உங்கள் துணையின் நடத்தை உங்களை உணர்சிவசப்பட வைக்கும். இது குடும்ப சூழ்நிலையின் மகிழ்ச்சியை குறைக்கும்.பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அது மகிழ்ச்சிகரமாக இருக்கது. உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும். நிதிநிலையில் ஏற்றத் தாழ்வுகளை சந்திப்பீர்கள்.

பதற்றமும் பேரார்வமும் ஆரோக்கியத்துக்கு உகந்ததல்ல. இத்தகைய உணர்வுகளை சமாளியுங்கள்.


கன்னி

நீங்கள் விரைந்து பணிகளை முடிப்பீர்கள். உங்கள் தன்னம்பிகையை வளர்த்துக் கொள்வீர்கள்.

உங்கள் பணியில் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள். அதிக வாய்ப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உறவுமுறையில் உற்சாகம் காணப்படும். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சுமூகமாக இருக்கும். இன்று அதிக பண வரவு காணும் நிலையில் இருப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்த விதமான பெரிய பிரச்சினையும் இருக்காது.


துலாம்

உங்கள் செயல்களை கண்காணிக்க வேண்டும். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் போராட வேண்டும். சூழ்நிலையை பொறுமையுடனும் உறுதியுடனும் எதிர்கொள்ள வேண்டும்.

சக பணியாளர்களுடன் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் கீழ் பணி புரிபவர்களிடம் கவனமாக இருங்கள்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடத்த வாய்ப்புள்ளது. உங்கள் இருவரிடமும் நல்ல புரிந்துணர்வு இல்லாததே இதற்குக் காரணம்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. நீங்கள் அதிகம் செலவு செய்வீர்கள். இதனால் பணப் பிரச்சினை உருவாகும்.


விருச்சிகம்

இன்றைய நாள் உங்களுக்கு உகந்த நாளாக இருக்காது.இன்றைய நாள் சுமூகமாக இருக்க நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணியிடத்தில் கடினமான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும். உங்கள் பணிகளை திறமையான முறையில் ஆற்ற நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

அகந்தைப் போக்கு காரணமாக உறவில் இணக்கமின்மை காணப்படும்.எனவே இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளது.

தலைவலி மற்றும் முதுகுவலியால் நீங்கள் பாதிக்கப்படலாம். எனவே ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வது நல்லது.

# இன்றைய ராசி பலன்கள் - 09-06.2024




இன்று சிந்தனை மிகுந்த நாளாக இருக்கும். எனவே உங்கள் இலக்குகளை திட்டமிட்டு மேற்கொள்வது நல்லது.

இன்று பணியிடத்தில் மிதமான பலன்களே கிடைக்கும்.நீங்கள் பணியில் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும். இத்தகைய உணர்வை தவிர்த்தல் நல்லது.

நிதி வளர்ச்சி சுமூகமாக இருக்காது. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.

நீங்கள் தலை வலியால் பாதிக்கப்படலாம். ஓய்விற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.




உங்கள் சமயோசித புத்தி மற்றும் புத்திசாலித்தனம் மூலம் நீங்கள் நன்மை அடைவீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அன்பாக உறவாடுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். பங்கு வர்த்தகம் மூலம் பண வரவு காணப்படும்.

நம்பிக்கையான எண்ணம் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். வளர்ச்சிக்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படும். சுய முயற்சி மூலம் உங்கள் கடின உழைப்பிற்கு பலன் பெறுவீர்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்புக்குப் பாராட்டு கிடைக்கும்.

காதலர்களிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரும் உறவில் கடந்த கால வேறுபாடுகளை மறந்து உறவை புதுப்பிக்கலாம்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் விருப்பங்களை எளிதில் அடைவதற்கு இது சாதகமான நாள். கடினமான சூழ்நிலையை எதிர் கொள்ளும் தைரியம் உங்களிடம் காணப்படும்.

பணியில் நற்பெயர் எடுப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். இதனால் உங்கள் தன்னம்பிக்கை நிலை உயரும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் பராமரிக்க இயலும்.

இன்று நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் பொறுப்புகளை நிறைவேற்றுவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thamilan Group Chairman

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Karathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park







# சுகாதார பராமரிப்பு அணுகலை மேம்படுத்துவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ், oDoc உடன் இணைவு

முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கையில் முன்னணி தொலைத்தொடர்பாடல் மருத்துவ சேவைகள் வழங்கும் நிறுவனமான oDoc உடன் பங்காண்மையில் கைச்சாத்திட்டுள்ளது.

சௌகரியமான மற்றும் வினைத்திறனான சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதை கவனத்தில் கொண்டு, தனது காப்புறுதிதாரர்களுக்கு மூலோபாய பங்காண்மைகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான புத்தாக்கத்தினூடாக சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பின் பிரகாரம் யூனியன் அஷ்யூரன்ஸ் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் oDoc வாடிக்கையாளர்கள் அனைவரும் பெருமளவு அனுகூலம் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

oDoc கட்டமைப்பினூடாக சகல வைத்திய ஆலோசனைகளுக்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதிதாரர்களுக்கு பிரத்தியேகமான விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

இதனை யூனியன் அஷ்யூரன்ஸ் ClickLife App இனூடாக இலகுவாக அணுகக்கூடியதாக இருக்கும்.

இந்த பிரத்தியேகமான சலுகையினூடாக, தரமான சுகாதாரப் பராமரிப்பை அணுகுவதற்கு ஒப்பற்ற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், காப்புறுதிதாரர்களுக்கு சுகாதாரப் பராமரிப்பு நிபுணர்களுடன் சௌகரியமான முறையில் அணுகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

oDoc வாடிக்கையாளர்களுக்கு மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க ஆயுள் காப்புறுதி தீர்வுகளை யூனியன் அஷ்யூரன்ஸ் வழங்கும். யூனியன் அஷ்யூரன்ஸின் நிபுணத்துவம் வாய்ந்த நிதிசார் ஆலோசகர்களினூடாக பிரத்தியேகமான வழிகாட்டல் வழங்கப்படும் என்பதுடன், oDoc வாடிக்கையாளர்களுக்கு தமது தேவைகளுக்கு பொருத்தமான வகையில் நிதிசார் எதிர்காலத்தை பாதுகாப்பானதாக்கிக் கொள்வதற்கு பொருத்தமான தீர்வுகள் வழங்கப்படும்.

இந்தப் பங்காண்மை தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பங்காண்மை விநியோக அதிகாரி வத்சலா அளுத்கெதர கருத்துத் தெரிவிக்கையில்,

“காப்புறுதிதாரர்களுக்கு ஆயுள் காப்புறுதி அனுபவத்தை மேம்படுத்துவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸைச் சேர்ந்த நாம் முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.


சுகாதார பராமரிப்பு செலவுகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்லும் நிலையில், எமது காப்புறுதிதாரர்களுக்கு அணுகக்கூடிய மற்றும் பரிபூரணமான தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

oDoc உடனான இந்த மூலோபாய பங்காண்மையினூடாக, இந்த நோக்கம் மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. எமது ஆயுள் காப்புறுதி நிபுணத்துவத்துடன், oDoc இன் மேம்படுத்தப்பட்ட தொலைத்தொடர்பாடல் மருத்துவ சேவைகள் கட்டமைப்பை ஒன்றிணைத்து, எமது காப்புறுதிதாரர்களின் வாழ்க்கையில் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்த முன்வந்துள்ளோம்.” – என்றார்.

oDoc இன் பிரதம நிறைவேற்று அதிகாரி லஹிரு கருணாரட்ன இந்தப் பங்காண்மை தொடர்பில் தமது கருத்தை தெரிவிக்கையில்,

“நாடு முழுவதிலும் தரமான சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்காக யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் கைகோர்த்துள்ளமையையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இந்தக் கைகோர்ப்பினூடாக, எமது சமூகங்களில் சுகாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவத்தை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.”– என்றார்.




# டயலொக் அனைத்து இலங்கையர்களுக்குமான Smartphone Plan ஐ அறிமுகப்படுத்துகிறது

இலங்கையின் #1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி, அனைத்து இலங்கையர்களும் மலிவான மற்றும் வசதியான முறையில் அதிநவீன Android Smart phone ஐ கொள்வனவு செய்வதற்கேற்ற தீர்வாக நாட்டின் முதல் Smartphone Plan களை அறிமுகப்படுத்துகிறது.

இந்த புதுமையான Plan மூலம், தற்போது Smartphone இன் மதிப்பில் 40 வீதம் மட்டுமே முன்பணமாக செலுத்தி புதிய Android Smartphone ஒன்றை கொள்வனவு செய்து மிகுதியை 24 மாதங்களில் மாதாந்த தவணை அடிப்படையில் Dialog Power Plan பிற்கொடுப்பனவு மொபைல் பில்லுடன் இணைத்து செலுத்த முடியும்.

முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களும் இப்போது தமது தற்போதைய மொபைல் இலக்கத்தை மாற்றாது தக்கவைத்தவாறு பிற்கொடுப்பனவு Power Plan இற்கு upgrade செய்து இந்த Plan இன் அனுகூலங்களை அனுபவித்திட முடியும். மேலும், Lesi Pay ஊடாகவும் இந்த Plan கிடைக்கப்பெறுகிறது. இது நல்ல கடன் மதிப்பீடு கொண்ட முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு நெகிழ்வான கட்டண தெரிவுகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை அனுபவிக்க வழிவகுக்கிறது.

மேலும், இந்த முன்னெடுப்பானது வாடிக்கையாளர்களுக்கு தமக்கு விருப்பமான ஸ்மார்ட்ஃபோனைத் தெரிவு செய்ய உதவுகின்றது, அவர்களுக்கான Power Plan மாதாந்த பில், சாதனத் தவணைகள் மற்றும் மாதாந்த Power Plan கட்டணங்கள் 3,298 ரூபாவிலிருந்து தொடங்கும். இந்த செயல்முறையானது தடையற்றது என்பதுடன், வாடிக்கையாளர்கள் எந்தவொரு Dialog Experience Centre க்கும் சென்று புதிய அன்ட்ரொய்ட் சாதனத்தை (Android device) சொந்தமாக்கிட வழி அமைக்கின்றது.

டயலொக் அறிமுகப்படுத்தும் இந்த முன்னெடுப்பானது, நவீன தொழில்நுட்பத்தை அணுகுவதை எளிதாக்குவதோடு மட்டுமின்றி, டிஜிட்டல் உள்ளிணைக்கையையும் மேம்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகிறது. முன்னணி சாதனங்களுக்கான அணுகல்தன்மையை இலகுவாக்குவதன் மூலம், டயலொக் நாடு முழுவதும் இலங்கையர்களுக்கு வலுவூட்டுவதுடன், அவர்கள் தொடர்ந்து இணைந்திருக்கவும், தகவல்கள் அறிந்தவர்களாக இருக்கவும் உதவுகிறது. இந்த முன்னெடுப்பு, டிஜிட்டல் மாற்றத்தைக் கொண்டுவரவும், அதன் மூலம் வாடிக்கையாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் டயலொக் கொண்டிருக்கும் கடப்பாட்டினை வெளிப்படுத்துகிறது.








# முதல் காலாண்டில் 92.7 பில்லியன் ரூபாவை திரட்டிய மொத்த வருமானத்தை ஈட்டியது மக்கள் வங்கி

இலங்கையின் முன்னணி நிதியியல் சேவைகள் வழங்குனரான மக்கள் வங்கி, 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த முதலாவது காலாண்டுக்கான நிதியியல் பெறுபேறுகளை அறிவித்துள்ளது.

மொத்த திரட்டிய தொழிற்பாட்டு வருமானமாக ரூபா 20.4 பில்லியனையும் மற்றும் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 2.5 பில்லியனையும் வங்கி பதிவாக்கியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, கூடுதல் விவேகத்துடன் மேற்கொள்ளப்பட்ட விதிவிலக்கான செம்மையாக்கல்களின் தாக்கம் நீங்கலாக, இந்த தொகைகளை சாதாரண நிலைமை அடிப்படையில் கருத்தில் கொள்ளும் போது அவை முறையே 18.2 வீதம் மற்றும் 35.8 வீதம் வளர்ச்சியுடன், ரூபா 28.4 பில்லியன் மற்றும் ரூபா 6.6 பில்லியன் ஆக அமைந்துள்ளன.


திரட்டிய தேறிய வட்டி வருமானம், 2023 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கப்பட்ட ரூபா 15.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இக்காலாண்டில் ரூபா 16.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. எந்தவொரு விதிவிலக்கானவற்றினதும் தாக்கம் நீங்கலாக, சாதாரண நிலைமை அடிப்படையில் திரட்டிய தேறிய வட்டி இலாப மட்டங்கள் 2023 இன் போது காணப்பட்ட 2.0 வீதத்திலிருந்து இலிருந்து 3.0 வீதமாக மேம்பட்டுள்ளதுடன், கடனுக்கான தவணை வைப்புச் செலவின் குறைவை பிரதிபலிக்கின்றது.

திரட்டிய தேறிய கட்டணங்கள் மற்றும் தரகுப்பணங்கள் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14.7 வீத அதிகரிப்புடன் ரூபா 3.8 பில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளது. மொத்த திரட்டிய தொழிற்பாட்டுச் செலவுகள் ரூபா 17.6 பில்லியனாக காணப்பட்டது.

மொத்த திரட்டிய வாடிக்கையாளர் வைப்புக்கள் ரூபா 2,808.3 பில்லியனை எட்டியுள்ளதுடன், நிகர கடன்கள் ரூபா 1,845.4 பில்லியனாக காணப்பட்டது. திறன்குறை கடன் விகிதமும் 2023 இன் முடிவுடன் ஒப்பிடுகையில் மேம்பாட்டைக் காண்பித்துள்ளது. மொத்த திரட்டிய சொத்துக்கள் இக்காலப்பகுதியின் முடிவில் ரூபா 3,264.5 பில்லியனை எட்டியுள்ளன).

வங்கியின் மொத்த அடுக்கு ஐ (Tier I) மற்றும் மொத்த மூலதன போதுமை விகிதங்கள் 2024 மார்ச் 31 இன் முடிவில் முறையே 11.5 வீதம் மற்றும் 16.1 வீதமாக காணப்பட்டன.

அதேசமயம், திரட்டிய அடிப்படையில், அவை முறையே 12.9 வீதம் மற்றும் 17.2 வீதமாக காணப்பட்டன. வங்கியின் கடன் தீர்க்கும் வலு மட்டங்கள் தொடர்ந்தும் சிறப்பான நிலையில் காணப்படுகின்றன. கூடுதல் தற்செயல் நோக்கங்கள் அடங்கலாக, அதன் ஒழுங்குமுறை மூலதனத்தை மேம்படுத்தும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.






# John Keells Properties நிறுவனம் புதிய குடியிருப்புத் திட்டமான [h-vy VIMAN திட்டத்தின் இரண்டாவது கட்டத்தை ஆரம்பித்தது



'Viman' ஜா-எல குடியிருப்புத் திட்டத்தினுடைய முதலாவது கட்டடத்தின் 90 வீதமானவை வெற்றிகரமாக விற்பனை செய்யப்பட்டிருப்பதால் அதன் இரண்டாவது கட்டம் பற்றிய அறிவிப்பை John Keells Properties நிறுவனம் பெருமையுடன் வெளியிட்டுள்ளது.

இரண்டு தொகுதிகளைக் கொண்ட புதிய கட்டமானது 2 மற்றும் 3 அறைகளைக் கொண்ட தொடர்மாடி வீடுகளாக அமையும். 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 19 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது முதல் 6 மாத காலப் பகுதிக்குள் முதலாவது கட்டம் ஏறக்குறைய முழுமையாக விற்பனை செய்யப்பட்டிருப்பதால் இரண்டாவது கட்டத்தில் வீடுகளைக் கொள்வனவு செய்ய விரும்பும் உரிமையாளர்களுக்கு குறுகிய கால வாய்ப்புக்களே காணப்படுகின்றன.

Viman குடியிருப்புத் திட்டத்தில் தொடர்மாடியொன்றை உரிமையாக்கிக்கொள்ள விரும்பும் வருங்கால உரிமையாளர்கள் கொழும்பில் அமைந்துள்ள அதன் மாதிரிக் கட்டமைப்பைப் பார்வையிட முடியும் என்பதுடன், தங்களது அனைத்துக் கேள்விகளுக்குமான பதில்களை துறைசார் அணியிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

John Keells Properties நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தலுக்கான தலைவரும், John Keells Group இன் பிரதித் தலைவருமான நதீம் ஷம்ஸ் குறிப்பிடுகையில்,

"தற்பொழுது முதலாவது கட்டத்தின் 90 வீதம் வெற்றிகரமாக விற்பனை செய்யப்பட்டிருக்கையில், Viman இன் முதலாவது கட்டத்துக்குக் கிடைத்த வரவேற்பினால் நாம் பெருமகிழ்ச்சியடைந்திருப்பதுடன், இரண்டாவது கட்டத்தை அறிவிப்பதில் புளகாங்கிதமடைகின்றோம்.

இது John Keells Properties நிறுவனத்தின் புத்தம் புதிய ரியல் எஸ்டேட் திட்டம் என்பது மாத்திரமன்றி, இது ஜா-எல நகரின் இதயப் பகுதியில் சௌகரியமான இடத்தில் அமைந்திருப்பதாலும், அமைதியான சுற்றாடலினை வழங்குவதாலும், Viman ஒரு தனித்துவமான முதலீடாக அமையும். இதன் இரண்டாவது கட்டமானது முற்றத்தில் பசுமையான அழகிய காட்சியை வழங்குவதுடன், நகரின் அழகான கோணத்தையும் வழங்குகின்றது." – என்றார்.

ஜா-எல நகரத்தின் இதயப் பகுதியில் 6 ஏக்கர் நிலப்பரப்பு விஸ்தீரணத்தில், சௌகரியமான நவீன 418 தொடர்மாடி வீடுகளைக் கொண்டிருக்கும் Viman பாதுகாப்பான மற்றும் நட்பான குடும்ப சூழல், சிறிய நகரக் கட்டமைப்புக்குள் இருந்து கொண்டு சௌகரியமானதும் இலகுவானதுமான கொழும்பு



நகருக்கான அணுகல் என கலவையான வசதிகளை வழங்குகிறது. பசுமை மிக்க மத்திய தோட்டப்பகுதியானது நீச்சல் தடாகம், உடற்பயிற்சிக் கூடம், தியான கூடம், கிளப்ஹவுஸ், சிறுவர்கள் விளையாட்டு இடம், சைக்கிள் ஓட்டம் மற்றும் நடைபாதைக்கான இடம், பல்வேறு தேவைகளுக்கான வெளியக விளையாட்டரங்கம், மின்னியல் வாகனங்களுக்கான மின்னேற்ற வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகை உள்ளடக்கியுள்ளது.

John Keells Properties நிறுவனம் நவீனத்துவம் மற்றும் நிலைபேறான வாழ்க்கைமுறை ஆகிய இரண்டு விடயங்கள் மீதும் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக Viman குடியிருப்புத் திட்டமானது வலுசக்தி நிறைந்த சூரிய சக்தியால் இயங்கும் வீடுகள் மற்றும் ஏராளமான பசுமையான இடங்கள் மற்றும் வலுவான சமூக உணர்வை வளர்ப்பது போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளது.

தொடர்ச்சியாகப் பலவித குடியிருப்பு வீடுகளுடன் திட்டத் தொகுதிகளை அமைப்பதிலும், இலங்கையின் நகர்புறக் குடியிருப்பின் கட்டடச் சூழலை சீர் செய்வதிலும் John Keells Properties தொடர்ந்தும் முன்னிலை வகிப்பதுடன், The Emperor, The Monarch, 7th Sense, OnThree20, TRI-ZEN மற்றும் Cinnamon Life Integrated Resort போன்றவை இதற்கு சாட்சியமாக அமைகின்றன.

Viman திட்டம் தொடர்பில் மேலதிக தவல்களைப் பெற்றுக்கொள்ள John Keells Properties நிறுவனத்தை 0706 062 062 என்ற இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொள்ளவும் அல்லது www.viman.lk என்ற இணையத் தளத்திற்கு விஜயம் செய்யவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.